# லண்டன் முரசு



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
— பாரதிதாசன்

முரசு 1 மார்கழி திருவள்ளுவர் ஆண்டு 2001 டிசம்பர் 1970 ஒலி 9


| | | | |
|---|---|---|---|
| ஆசிரியருரை | 2 | லண்டன் விநோதம் பரீர் | 21 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 | கிறிஸ்துமஸ் பாட்டு | 21 |
| மேற்குநாடுகளின் செய்திகள் | 9 | நாளை நமதே | 22 |
| கழிவு நீரில் கற்பகம் | 13 | சிந்தனைச் சிற்பிகள் மத்தியிலே | 23 |
| சிறு துளி பெரு வெள்ளம் | 14 | கவிதைகள் | 24 |
| தமிழின் சிறப்பு | 15 | English Supplement | |
| பேனா நண்பர்கள் பகுதி | 16 | Tamil through English | 25 |
| அன்புள்ள ஆசிரியருக்கு | 17 | News from Mauritius | 26 |
| செந்தமிழ் | 19 | Letters to the Editor | 26 |
| வாடகைக்கு குடியிருப்பு மனைகள் | 20 | Vacancies | 27 |



கௌரவ ஆசிரியர் : ச.ம.சதானந்தன்

கௌரவ உதவியாளர்கள் :
ந.சச்சிதானந்தன்
பொன். பாலகோபால்
தம்பையா இராமநாதன்
ஜே.வீ.ஆனந்தஜெயராஜா
எஸ்.டி.சிவசோதி

கௌரவ நுண்கலை பொறுப்பாளர்கள் :
ச.காங்கேசன்
நாகலிங்கம் இராமநாதன்

தமிழ்நாட்டு நிருபர் பிரதிநிதி : டி.செல்வராஜன்

மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ் திங்கள் ஏடு

இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம்

A Non-Profit making Publication

PUBLISHED BY LONDON MURASU PIRASURAM (Regd)

8 ASHEN GROVE LONDON S W I9

## தமிழைக் காப்போம்!

தமிழன்னை அரியணை ஏறி வெற்றிப் பெருமிதம் அடைந்து வருகின்ற நேரத்தில் வேதனையான செய்தி ஒன்று கேட்டு உள்ளம் வெதும்புகிறோம். தமிழ் நாட்டிலேயே தமிழ் மூலம் கல்வி கற்க எதிர்ப்பு உள்ளது என்ற செய்தியைக் கேட்டு வெட்கப்படுவதா? அல்லது வேதனைப்படுவதா? என்று தெரியவில்லை.

அன்னை ஊட்டும் பாலுக்கு இணையான உணவு வேறு இல்லை, தாய்ப் பாலை ஊட்டும்போது ஒருவனுக்கு அன்னை உணவை மட்டுமே ஊட்டுவதில்லை. அவளது உள்ளத்தையும் சேர்த்தே ஊட்டுகிறாள். இந்தத் தாய்மையின் தத்துவத்தை உணரமுடியாத தமிழர்களும் உள்ளார்கள் என்பதைக் கேள்வியுற்றால் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் வேதனையின் எல்லையை அடைவார்கள் என்பது திண்ணம்.

தமிழ்மொழி மூலம் கல்வி கற்போருக்கே வேலை என்ற முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் முடிவு, எல்லைத்தந்தை — சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களின் ஆசியுடன் வெளியாகும் நேரத்தில் தமிழுக்கும் எதிர்ப்பு உள்ளது என்பதைவிட கேவலம் வேறு என்ன இருக்க முடியும்? ஒன்று மட்டும் உறுதி; தமிழ் உள்ளம் படைத்த விநயகம், கம்பனைப் புகழும் கருத்திருமன் போன்றவர்கள் எதிர்க்கும் போது அதற்கு மறைமுக உதவிகள் வடக்கிலிருந்தும், வெளியில் இருந்தும், உள்ளேயே இருக்கும் எட்டப்பர்களிடமிருந்தும் எவ்வளவுதூரம் வரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தோன்றுகிறது. தமிழ்மக்கள் சிறிது அயர்ந்து விட்டால் எத்துணை விபத்துக்கு ஆளாக நேரக்கூடும் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழக அரசின் தமிழார்வத்தை லண்டன் முரசு பாராட்டுவதுடன் தமிழ்மொழியைக் காக்கும் கடமையில் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் திறமையுடன் பணியாற்ற வாழ்த்துகிறோம். ஏற்றதொரு கருத்தை எடுத்துரைப்பேன், நில்லேன், அஞ்சேன் என்ற புரட்சிக் கவிஞின் எழுத்துக்களையும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் வேத வாக்கையும் நினைவில் கொண்டு கடமையாற்ற வேண்டுகிறோம். எதிர்ப்பைக் கண்டு கலங்க வேண்டாம். வெற்றி நிச்சயம்!

---

## இலங்கையில் தமிழ் மாணவர்கள் இன்னல்!
## இளந்தமிழர்களே ஒன்று சேருங்கள்!

மனித இனத்தின் அறிவை வளர்ப்பது கல்வி. அன்பைக்கூட்டுவதும் கல்வி. பண்பை வளர்ப்பதும் கல்வி. கல்வி இன்றேல் இந்த முன்னேறி வரும் அணுயுகத்தில் எதைத்தான் சாதிக்க முடியும் தமிழர்கள் கல்வித் துறையில் முன்னணியில் நிற்பது அவர்கள் செய்த குற்றமா இலங்கையில் தமிழர்களின் கல்வி முன்னேற்றத்தை இனரீதியில் தடுக்க வைப்பது தமிழ் இனத்தை, தமிழ் மொழியை, தமிழ் கலாச்சாரத்தை ஒடுக்க வைப்பது போன்ற ஒரு செயலாகும்.

வெளிநாடுகளுக்கு கல்வி கற்க தமிழ் மாணவர்கள் செல்லமுடியாத நிலை—உள்நாட்டிலும் அதே நிலை வந்துள்ளது. தமிழ் மாணவர்களின் எதிர்காலத்தை தமிழ் மக்களின் எதிர்காலத்தை இப்படித் திட்டமிட்டுப் பொசுக்குவதை தமிழினம் எப்படிப் பார்த்துக் கொண்டு இருக்க முடியும்? மாணவர்களின் கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் பயன் தரவில்லை என்றால் என்ன செய்யப் போகிறீர்கள்?

கிராமங்கள்தோறும் பல்கலைக் கழகங்களாக மாறட்டும். வீட்டுக் கொல்லைகளெல்லாம் விஞ்ஞானப் பொறியியல் ஆராய்வுக் கூடங்களாக மாறட்டும். இலங்கைக்கு வெளியேயுள்ள இலட்சக்கணக்கான தமிழ் மாணவர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும். அனைவரும் கைகொடுத்து உதவ முன்வரவேண்டும். இனியும் தமிழ் இனம் வாழா இருக்க முடியாது!

---

# தாய்நாடுகளின் செய்திகள்

*************** ******************

## தமிழ் மொழி மூலம் கல்வியைப் புறக்கணிக்காதீர்கள் !

### தமிழக முதலமைச்சர் எச்சரிக்கை!

"தமிழ் மொழி மூலம் கல்வியைப் புறக்கணிப்போரை தண்டிக்கக் கூடிய சட்டம் இன்னும் சில வருடங்களில் நிறைவேற்றப்படும்". இவ்வாறாக தமிழக முதலமைச்சர் சட்ட சபையில் தெரிவித்தார்." தமிழ் மொழி மூலம் மட்டுமே,அரசினர் மற்றும் தனியார் கல்லூரிகள் யாவற்றிலும் கல்வி கற்கும்படியாக தமிழக அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென " தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி அவர்கள் கொண்டுவந்த பிரேரணையைத் தொடர்ந்து மூன்று மணி நேர விவாதம் ஒன்று நடைபெற்றது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு,விநயகம் அவர்கள் தமிழ் மக்களின் வரிப் பணத்தில் நடத்தப்படும் அரசினர் கல்லூரிகளில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கப்படுவதை எதிர்த்துப் பேசினார்.வறிந்தித்திணிப்பைப் போலுள்ளது தமிழ் மொழி மூலம் கல்வி முறை என்றும்,தமிழ் இலக்கியம் படித்தவர்கள் தனியார் நிறுவனங்களில் வேலை பார்க்க முடியாதெனவும் கூறிய இவரது பிதற்றலைத் தொடர்ந்தே முதலமைச்சர் இடையிட்டுப் பேச வேண்டி ஏற்பட்டது.

தமிழ் மூலம் கல்வி,தமிழ் இலக்கியத்தை மட்டுமின்றி சகல துறைகளையும் உள்ளடக்கும் என்று எடுத்துரைத்தார் முதலமைச்சர். தமிழ் மொழி மூலம் கல்வி பயின்ற பட்டதாரிகளைமட்டுமே தனியார் நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்த வேண்டிய நிலையை இன்னும் சில வருடங்களில் சட்டம் மூலம் கொண்டுவரவேண்டி வரும் என்று தெரிவித்த முதலமைச்சர்,தமிழில் கல்வி கற்காதோர் தண்டிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார்.

தமிழ் நாட்டு மக்கள் தமிழ் மொழி மூலம் கல்வியையே வரவேற்கின்றனர் என்று எடுத்துரைத்து தமிழ்க்கல்வியை எதிர்த்துத் தகாது பேசுவோரைக் கண்டித்துப் பேசினார் திரு. இராம அரங்கணல் அவர்கள்.

---

## சென்னையில் மாணவர் மீது தடியடி கண்ணீர் புகை !

"தமிழ் மொழி மூலம் கல்வியை திணிக்காதிருக்க வேண்டும் "எனக் கோரி மூன்று சென்னை கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர் கூட்டம் ஒன்று தலைமைச் செயலகத்தின் எதிரே சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழ் மொழி மூலம் கல்வி யை ஆதரித்த மாணவர் கூட்டம் ஒன்றும் செயலகத்தின் முன் வந்து நின்றது.இரு கூட்டங்களையும் பொலிசார் இடைநின்று பிரித்து வைத்தனர்.

சுமார் 2000 மாணவர் கொண்ட தமிழ் மொழி மூலம் கல்வியை எதிர்த்த கூட்டத்தினர் பொலிசாரைத் தாண்டி கோட்டைக்குள் நுழைய எத்தனித்ததால் அது கலவரமாகமாறியது. மாணவர்கள் கற்களையும் செருப்புக்களையும் பொலிசார் மீது வீசினர்.இவ்வன்முறையை அடக்க பொலிசார் தடியடி மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகித்தல் ஆகியவற்றைக் கையாண்டனர்.15 மாணவர்கள் இதனால் காயமுற்றனர்.16 மாணவர்கள் பொலிசாரால் காவலில் வைத்துப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.தமிழ் மொழி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு மறைமுகமாக ஏஜெண்டுகள் ஈடுபெட்டிருக்கலாமென்ற நம்பிக்கைக்கான ஆதாரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

---

## சிங்கையின் ஜனாதிபதி மறைவு

சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதி இஞ்சே யுசுப் பின் ஐஷாக் அவர்கள் நவம்பர் 23-ந் திகதியன்று காலமானார்.இதையொட்டிய தகனச் சடங்கிற்கு மலேசிய அரசின் பிரதிநிதியாக பினாங்கு தேசாதிபதி துன் செய்யது பரக்பாவும்,மலேசிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக சுகாதார அமைச்சர் சர்தான் ஜுபீரும் சிங்கை சென்றிருந்தனர்.

---

இலங்கையில் பாப்பரசர்

தென்கிழக்காசிய நாடுகளின் சுற்றுப்பிரயாணத்தின் கடைசிக் கட்டத்தில், பாப்பரசர் ஆறுவது சின்னப்பர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். டிசம்பர் 4ந் திகதி வெள்ளி இரவு கட்டு நாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய புனித பாப்பரசர் இலங்கையில் இரண்டு மணித்தியால நேரம் தங்கிச் சென்றார்.

இலங்கை வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சி

பாப்பரசர் ஒருவர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல் தடவை என்பதால் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும் என்று இலங்கையின் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா கத்தோலிக்க மக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் தெரிவித்திருந்தார்.

பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள்

எலிசபெத் மகாராணியின் வருகைக்குப் பின்னர் இலங்கைக்கு வருகை தந்தோரில் மிகப் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள் பாப்பரசர் வருகையின் போது கையாளப்பட்டன.

யாழ் மாநகர சபையின் வாழ்த்து

யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் சார்பில் வெள்ளிப்பேழையில் வைக்கப்பட்ட வாழ்த்துரை ஒன்றை மாநகர சபை முதல்வர் திரு.ரி.எஸ்.துரைராஜா பாப்பரசரிடம் வழங்கினார்.

— — — — —

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் அநாகரிகமான ஏற்பாடு!
எட்மண்ட் சமரக்கொடி கண்டனம்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இரண்டு முதலாளித்துவ அரசாங்கங்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட மிகவும் அநாகரிகமானதோர் ஏற்பாடு என்று இலங்கையின் , புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.எட்மண்ட் சமரக்கொடி அண்மையில் கோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். தற்போதைய அரசியல் அமைப்பிற்கேற்ப செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் சம்பந்தமான சட்டம் புதிய அரசியல் திட்டத்திலும் சேர்த்துக்கொள்ளப்படுமோ என்பது ஒரு பிரச்சினை ஆகும் என்றும் அவர் கூறினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உதவிச் செயலாளர் திரு.எம்.பி. சுந்தரம் பேசுகையில் நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் ஒரு பகுதி பாட்டாளி மக்களின் உரிமைகளை வழங்காமல் சோஷலிசம் பற்றிப் பேசுவது முறைகேடான விஷயம் என்று குறிப்பிட்டார்.

— — — — —

மலேசிய பல்கலைக் கழகத்தில் தேசிய மொழிப் பாவிப்பு

உடனடியாக மலேசியப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மொழியாக "பாசா மலேசியா" அறிமுகப்படுத்தப்படுமென, துணைவேந்தர் பேராசிரியர் உங்கு அசீஸ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். படிப்படியாக பல்கலைக்கழகத்தின் சகல துறைகளிலும் பாசா மலேசியா விலேயே யாவும் கற்பிக்கப்படுமென மேலும் தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

— — — — —

சபாவிற்குத் தொலைக்காட்சி

மலேசியாவின் கிழக்குப் பிரதேசமான சபா மாநிலத்திற்கு அடுத்த ஆண்டு, 1971 முடிவிற்குள் தொலைக்காட்சி (Television) வசதிகள் செய்யும் திட்டம் துரிதமாக முன்னேறி வருவதாக வேலைப்பகுதி, தபால் தொலைப் போக்குவரத்து அமைச்சர் துன்.வீ.ரி. சம்பந்தன் தெரிவித்தார்.

— — — — —

நீலகிரி பற்றி வண்ணப் படம்

தமிழக அரசு ஊருகுரு ஊட்டி அமர்ந்துள்ள நீலகிரி மாவட்டத்தின் இயற்கைஅழகை ஒரு வண்ணப் படமாக எடுக்க முடிவு செய்துள்ளது. இப்படம் இந்தியா முழுவதும் திரையிடப்பட்டு, இதன் மூலம் நீலகிரியின் அழகை உல்லாசப் பிரயாணிகள் யாவரும் கொள்ளைகொள்ள எதுவாக

## வட பகுதியில் மாணவர் அணி திரண்டனர்.

## இலங்கையில் இனரீதியில் கல்விமுறைக்கு ஏகோபித்த எதிர்ப்பு !

இலங்கை அரசின் இனரீதியில் கல்வி முறை பாரபட்சத்திற்கு எதிராக மாபெரும் எதிர்ப்பு வட மாகாணத்தில் தோன்றியுள்ளது. நவம்பர் மாதம் 24—ந் திகதியன்று வடபகுதி கல்லூரிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கொடும்பாவிகளைத் தூக்கிக்கொண்டு அதிர வைக்கும் சுலோகங்களை முழங்கிய வண்ணம் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தை நோக்கி நடந்தனர். ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்ற இடமெல்லாம் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகளும் இரகசியப் பொலீஸ் நடவடிக்கைகளும் காணப்பட்டன.

பல்கலைக் கழகத்தின் மருத்துவ, பொறியியற் பிரிவுகளுக்கு இன அடிப்படையில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதைக் கண்டித்தும் கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் நடத்தும் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை கண்டிராத மிகப் பிரமாண்டமான இந்த ஊர்வலம் சில மைல்கள் நீளமானதாக இருந்தது. நகர முழுவதும் பொலிசார் வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. கல்லூரிகளை மருவி நிற்கும் மரங்கள் மீது கல்வி அமைச்சரைப் பிரதிபலிக்கும் கொடும்பாவிகள் தொங்கவிடப் பட்டிருந்தன. ஊர்வலத்தில் முன்னே பிரேதப்படையொன்று செல்ல அதனைச் சுற்றி மாணவர் ஒப்பாரி வைத்துச் சென்றனர். கூடவே தகர டப்பாக்களில் அடித்துச் சோககீதம் பாடிய படையொன்றும் சென்றது.

மிகவும் கட்டுப்பாட்டுடன் யாழ் கோட்டை மைதானத்தை வந்தடைந்த மாணவர்கள் அங்கு கண்டனக் கூட்டமொன்றை நடத்தினார்கள். மாணவர்கள் பிரதிநிதிகள் பலரும் கல்வியமைச்சின் பாரபட்சமான இன ஒதுக்கல் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள். இன, மத பேதமற்ற முறையில் திறமைக்கு முதலிடம் கொடுக்கும்படி மகா தேசாதிபதிக்கும், பிரதமருக்கும் அனுப்பப்படும் மகஜர்கள் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன.

---

## எல்லா சாதியினரும் கோவில்களில் அர்ச்சகராகலாம்.

## தமிழகத்தில் சட்டம் நிறைவேறியது.

தமிழகத்தின் கோவில்களில் பரம்பரை பரம்பரையாக குறிப்பிட்ட சாதியினர் மட்டும் அர்ச்சகராகவும் குருக்களாகவும் இருக்கும் நிலை மாறி, இனி சகல சாதியினரும் மேற்படி பணிகளில் ஈடுபடலாம். இதற்கான மசோதா ஒன்று தமிழ்நாடு சட்டசபையில் அண்மையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட திருத்த மசோதாவை அமைச்சர் தாக்கல் செய்த போது பேசுகையில்: இந்த மசோதா ஆளை மாற்றுவதற்காக கொண்டுவரப்பட்டு இருக்கிறதே ஒழிய கொள்கை கோட்பாட்டால் மாற்றம் செய்வதற்காகக் கொண்டுவரப்பட இல்லை. எனவே இந்த சட்டதிருத்தத்தால் இந்து மதம் வளருமே தவிர ஒழிந்து விடாது என்று கூறினார். சிலம்பின் செல்வர் ம. பொ. சி. அவர்கள் உட்பட பலகட்சிப் பிரமுகர்களும் இம்மசோதாவை ஆதரித்துப் பேசினார்கள்.

---

## இ. போ. ச. ஊழியருக்கு அரசியல் உரிமை.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் யாவரும் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து இலங்கையில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களில் இ. போ. ச. ஊழியர்கள் பலர் போட்டியிடுகின்றனராம். இ. போ. ச. வின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து ஏனைய அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியருக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

---

## தனியார் வாகனங்களை சுவீகரிக்க இலங்கையில் சட்டம்.

தனியார் வாகனங்களை விவசாய அபிவிருத்தித் தேவைகளுக்கு உபயோகப் படுத்த இலங்கை அரசு மசோதா ஒன்றை ஆட்சி மன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. தேவையானபோது தற்காலிகமாக சுவீகரிப்பதற்கான உத்தரவை அரசாங்க அதிபர்கள் விதிக்கலாமாம். இவற்றை மீறுபவர்களுக்கு இரண்டு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது 2000 ரூபா அபராதம் விதிக்கப்படுமாம்.

---

## இந்தியப் பிரஜாவுரிமை பெறும் இலங்கையின் மலையக மக்களின் அவல நிலை.

இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியா செல்லும் இலங்கையின் மலையக மக்கள் நிலை குறித்து விதவிதமான செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் தென்னிந்தியாவில் மண்டபத்தில் சென்று தங்கும் அகதிகளுக்கு போதுமான பண உதவி வழங்கப் படுகின்றதா என்ற பிரச்சினை தோன்றியுள்ளதாம். பண உதவி வழங்கப்படுவது நிறுத்தப்படவில்லையென இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவராலயப் புனர்வாழ்வு அதிகாரி இலங்கையின் செய்தி பத்திரிகைக்குத் தெரிவிக்குமளவிற்கு இப்பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

செய்தி பத்திரிகையின் நிருபர் திரு. இராமச்சந்திரன் வெளியிட்டுள்ள உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்ட தொடர்கட்டுரையில் மலையகத்திலிருந்து தமிழகம் செல்லும் பாட்டாளி மக்கள் படும் துயரங்களும் அல்லல்களும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து தேயிலைத்தோட்டங்களைத் தவிர வேறு எந்தத் திக்கும் தெரியாத பல பாமரத் தொழிலாளர்களும் ஓரளவு இந்திய அனுபவமுள்ள தொழிலாளர்களும், உள்ளூர் உறவினர், நண்பர்கள் யாவரையும் பிரிந்து செல்கின்றோம் என்று தங்களையே மறந்த நிலையில் கண்ணீர் விட்டுக் கதறி அழும் காட்சி என்னை நிலைகுலையச் செய்ததுடன் கண்ணீர்மல்கச் செய்துவிட்டது என செய்தி நிருபர் தெரிவித்துள்ளார்.

ஓயாத உழைப்பினால் ஓரளவு சேமித்து வைத்த பணத்தைக் கொண்டு செல்லும் பொழுது, இவர்களின் அறியாமையைக் கண்டு பணத்தை அபகரிக்க எத்தனை எத்தனையோ கொள்ளைக்கூட்டங்கள் இரயிலில் இடம் பிடிப்பதிலிருந்து, பாஸ்போர்ட், விசா, விண்ணப்பத்தாள்கள் நிரப்புதல் வரைக்கும் பல நூற்றுக் கணக்கான ரூபாவை செலவழித்து இவர்கள் தமிழகம் செல்ல வேண்டியுள்ளது.

தமது சொந்தமான நிலவளம் பொருந்திய மலையகத்தை விட்டு வெளியேறாமலிருந்தால் இப் பாட்டாளி மக்கள் இவ் அவல நிலைகளுக்குள்ளும் இனிப்பல கஷ்டங்களுக்குள்ளும் ஆகாது இருக்கலாம் அல்லவா

---

## வட ஆற்காட்டில் இரும்பு !

## ஐ.நா. நிபுணர்கள் கண்டுபிடிப்பு !

தமிழ்நாட்டின் வட ஆற்காடு மாவட்டத்தில் இரும்புத் தாது இருப்பதாக ஐக்கியநாடுகள் சபை நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். திருவண்ணாமலை அருகே வேடியப்பன் மலை, குவுத்திமலை என்னும் பகுதிகளில் பூமிக்கு அடியில் 12கோடி டன் இரும்புத் தாது கிடைக்கும் என ஐ.நா. நிபுணர்களின் அறிக்கை தெரிவித்துள்ளது.

---

## திரைப்பட நிதி கூட்டுத்தாபனம்,

## தமிழக அரசால் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் திரைப்பட நிதிக் கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்படும். கிராமியப் பகுதிகளில் திரைப்பட மண்டபங்கள் கட்டவும், குறைந்த செலவிலான திரைப்படங்கள் தயாரிக்கவும் இக் கூட்டுத்தாபனம் கடனுதவி புரியும். இவ்வாறாக 1969ன் இந்திய தேசிய திரைப்பட விருதுகள் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் தமிழக முதலமைச்சர் தெரிவித்தார். பரிசளிப்பு விழா சென்னை பல்கலைகழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

சென்னையில் இந்தியத் தேசிய திரைப்பட விருதுகள் பரிசளிப்பு விழா நடைபெறுவது இதுவே முதல் தடவை ஆகும். கோலாகலமாக நடைபெற்ற இவ்விழாவில் மத்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சர் திரு. சத்யநாராயண் சின்ஹா கலந்து கொண்டார். பரிசுகளை தமிழக முதலமைச்சர் மு.க. அவர்கள் வழங்கினார்கள்.

---

## புதுமை வேடத்தில் நடிக்கும் எம்.ஜி.ஆர் பங்களூர் லால்பாக்கில் காதல் காட்சி !

புதுமையான வேடமொன்றில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் நடிக்கும் சங்கே முழங்கு படத்தின் காதல் காட்சிகள் இயற்கை அழகு பொருந்திய பங்களூர், லால்பாக்கில் படம் ஆக்கப்பட்டது. காதல் காட்சியில் மக்கள் திலகத்துடன் லட்சுமி நடிக்கின்றார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளம்.

நவம்பர் இறுதி வாரத்தில் ஏற்பட்ட பெருமழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பலபகுதிகள் வெள்ளக் காடாக மாறின. தாழ்ந்த பகுதிகள் எல்லாம் நீரில் மூழ்கி மக்கள் பலர் குடிபெயர்ந்து பாடசாலைகளிலும் வசதியான வீடுகளிலும் கோவில்களிலும் சென்று குடியமர்ந்தனர். குளங்கள் நிரம்பியதாலும் பல குடும்பங்கள் குடிபெயர வேண்டி ஏற்பட்டது. காரைநகர், புத்தளம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பலத்த சேதம் ஏற்பட்டது.

சமூக சேவை இலாகா வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழு நிலைமையை ஆராய்ந்து உதவிகள் அளிப்பதாக அறிவித்துள்ளது.

---

சென்னையில் பெருமழை.

நவம்பர் மாத பிற்பகுதியில் சென்னையில் பல இடங்கள் பெருமழையினால் வெள்ளக் காடாக மாறின. வெள்ளத்தால் நால்வர் மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பல குடும்பங்கள் பெருமழையினால் தங்கள் வீடுகளைஇழந்தனர். வீடுகளை இழந்தவர்களுக்கு முதலமைச்சர் மு.க. அவர்கள் 75,000 ரூபா உதவியை உடனே அளித்துள்ளார்.

---

வட இலங்கையின் எண்ணெய் வளம் பற்றி ரஷ்ய நிபுணர்கள் ஆராய்வர்.

இலங்கையின் வட மாகாணத்தில் எண்ணெய் வளம் இருக்கின்றதா என்பதனைஆராய ரஷ்யாவிலிருந்து நிபுணர் குழுவொன்று இலங்கை வரவிருக்கின்றது.

வடபகுதிக் கரையோரங்களில் எண்ணெய் வளப் படிவங்கள் இருக்கக் கூடும் என்ற கருத்து நீண்ட காலமாக இருந்து வருவது தெரிந்ததே. முன்னைய அரசின் பதவிக் காலத்தில் இது பற்றி ஆராய்ந்து சென்ற பிரெஞ்சு நிபுணர்கள் எண்ணெய் பற்றிய சாத்தியக் கூறுகள் இல்லையென்று கூறிவிட்டனர்.

இந்தியாவில் எண்ணெய் வள ஆராய்ச்சியில் முதலில் மேற்காசிய நிபுணர்கள் திருப்திகரமற்ற முடிவைத் தெரிவித்தும், பின்னர் வரவழைக்கப்பட்ட ரஷ்ய நிபுணர்கள் எண்ணெய் இருப்பதைக் கண்டு பிடித்தனர். இது போலவே சோவியத் நிபுணர்கள் மனம்விட்டு ஆராய்ந்து முடிவுகளைத் தெளிவாக ஆராய்வர் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. மேற்கு நாடுகளிலிருந்து வரும் நிபுணர்கள் எண்ணெய் இருப்பினும் அதுபற்றிய சரியான தகவல்களைத் தெரிவிக்கமாட்டார்கள்என்ற கருத்தை சில இடதுசாரித் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

ராஜாஜியின் பிறந்த நாளில் தமிழ்த்தலைவர்கள் நல்வாழ்த்துக்கள்.

ராஜாஜியின் 93-வது பிறந்த தினத்தன்று தமிழ்த்தலைவர்கள் தமது நல்வாழ்த்துக்களை ராஜாஜிக்குத் தெரிவித்தனர். தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் ராஜாஜியின் இல்லம் சென்று அவர் உடல் நலம் விசாரித்து தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தமிழரசுக் கழகத் தலைவர் மபொ.சி, கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், தமிழக கவர்னர் உஜ்ஜல் சிங் ஆகியோரும் கீழ்ப்பாக்கத்திலுள்ள ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ராஜாஜிக்கு நகரிலுள்ள பலவேறு கோவில்களிலிருந்தும் வந்த பிரசாதங்கள் அளிக்கப் பட்டன.

பிறந்த நாளன்று ராஜாஜி பத்திரிகை நிருபர்களுக்கு பின்வரும் செய்தியை விடுத்தார் "என்னுடைய நீண்டநாள் வாழ்க்கையே ஒரு செய்தியாக விளங்குகிறது. நான் மேலும் வாழக்கூடிய ஆண்டுகள் நாட்டிற்கு ஏதேனும் ஒரு வகையில் பயன்பட வேண்டும் என விரும்புகிறேன்".

---

டாக்டர் சி.வி.ராமன் மறைவு.

உலகின் தலைசிறந்த விஞ்ஞானியும் நோபல் பரிசு பெற்றவருமான டாக்.சி.வி.ராமன் தனது 82-வது வயதில் காலமானர். சில காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்த டாக்டர். ராமன் பங்களூரில் நவம்பர் 21-ந் திகதி காலை மாரடைப்பால் உயிர் துறந்தார்.

பௌதிகத்துறையில் பெரும் ஆராய்ச்சிகளை நடத்தியுள்ள இவர் ராமன் விளைவு என்ற அரிய ஆராய்ச்சிக்காக 1930-ஆண்டில் நோபல் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

## இலங்கைப் பிரதமருக்கு தமிழ் மாணவர் பேரவையின் கடிதம்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மாணவர் பேரவையினர் இலங்கைப் பிரதமர் திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்காவிற்கு பாரபட்ச கல்விக் கொள்கை பற்றி விளக்கம் கோரி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

"...நாங்கள் குலத்தால் தமிழரென மறவடுப் பெற்றேம் என்ற ஒரே காரணத்திற்காக எமது இடையரு உழைப்பும் எமக்கிருந்த திறமையும், புள்ளிகள் ரீதியாக நாம் பெற்றிருந்த முதன்மையும் தங்கள் மக்கள் அரசால் புறக்கணிக்கப் பட்டன. ....."

"...பாரபட்சமாக தமிழ் மாணவர்களாகிய நாம் மட்டும் உங்கள் கணிப்பீடுகளால், புறக்கணிக்கப்படுவதற்குரிய காரணத்தை —நீங்கள் மட்டும் ஆட்சி பீடம் ஏறியபின் நடைமுறைப் படுத்தியுள்ள கல்விக் கொள்கைக்கான தெளிந்த விளக்கத்தை—எமது மாணவர் பேரவைக்கு குறைந்த கால கெடுவுக்குள் தெரியப் படுத்த வேண்டுகின்றேம்!"

இனரீதியாக கல்வி பாரபட்சம் சம்பந்தமான ஒன்பது கேள்விகளைக் கொண்டுள்ள இக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"எமது இக்கோரிக்கைகளுக்கு 10—ந் திகதி மார்கழி 1970—க்கு முன் தங்கள் பதிலை எதிர்பார்க்கின்றேம். பதில் தராமலோ—எமது கோரிக்கை வினக்களுக்குரிய விடை, விளக்கங்கள் தட்டிக் கழிக்கப் பட்டாலோ தமிழ் மாணவர் பேரவை அரசாங்கத்தின் கல்விக்கொள்கைக்கு எதிராக அடுத்த நடவடிக்கை எடுக்கும் என்று கூறி விழைகிறேம்".

---

## யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப வழக்கு தள்ளுபடி.

யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரான திரு.சி.எக்ஸ்.மார்ட்டின் தொடர்ந்து எம்.பி.யாகப் பதவி வகிப்பார். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இவரது தேர்தலை ஆட்சேபித்து திரு.அல்பிரட்.துரையப்பா கொண்டுவந்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

---

## வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் தீவிரமாகப் பயன்படுத்தப்படும்.

இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கும், இந்தியாவிலிருந்து வரும் தமிழர் குடியேற்றங்களைத் தடுக்கவும் இராணுவம் தீவிரமாகப் பயன்படுத்தப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது. இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாகபாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

---

## தமிழ்நாட்டில் மதுபானம் தயாரிக்கலாம்—புதிய சட்டம்.

தமிழ்நாட்டில் இனி மதுபானம் தயாரித்து ஏனைய இடங்களுக்கு விற்பனை செய்யலாம். இதற்கான மசோதா ஒன்று அண்மையில் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனல் மதுவிலக்குக் கொள்கை கைவிடப்படாதாம்.

---

## திருப்பதிக்கு விமான சேவை.

சென்னைக்கும் திருப்பதிக்குமிடையே இனிமேல் விமானத்தில் செல்லலாம். திருப்பதியில் கட்டப்பட்டுவரும் விமானநிலையம் இன்னும் ஒரு வருடத்தில் பூர்த்தியாகி விடும். அதன்பின் பக்தர்கள் சென்னையிலிருந்து விமானத்திலேயே திருப்பதி சென்று வரலாமாம்.

---

## சமயபுரம் கோவில் கும்பாபிஷேகம்—

## லட்சம்பேர் பார்த்தார்கள்.

திருச்சியை அடுத்துள்ள தமிழகத்தின் முக்கிய கோவில்களிலொன்றான சமயபுரம் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் டிசம்பர் 5—ந் திகதி நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவிற்கு தமிழகத்தின் பலபகுதிகளிலிருந்தும் லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்திருந்தனராம். திருப்பணிக் குழுத் தலைவர் கிருபானந்தவாரியாருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பொன்னடை போர்த்தினர். விழாவில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## மேற்கு நாடுகளின் செய்திகள்

### தமிழில் என்ன தேசியகீதம்?
### தென்கிழக்கு லண்டன் பொறியியற் கல்லூரியில் இனவெறி!

தென்கிழக்கு லண்டன் பொறியியற் கல்லூரியில் அண்மையில் கிறிஸ்துமசை முன்னிட்டு மாணவர் கலைவிழா ஒன்று நடத்தப்பட்டது. கலைவிழாவில் பல தேசிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. இலங்கை மாணவர்கள் சிலர் தமிழில் தேசியகீதத்தைப் பாடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியைப் பலமாக எதிர்த்த சில சிங்கள மாணவர்கள் கல்லூரி அதிகாரி வரை சென்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். தமிழில் என்ன தேசியகீதம்? என்ற போக்கில் இருந்தது சிங்கள மாணவர்களின் எதிர்ப்பு. எதிர்ப்பை அலட்சியம் செய்து நிகழ்ச்சியை நடத்தி வைக்க தமிழ் மாணவர்கள் பலரும் ஒன்று திரண்டனர். ஆனல் கல்லூரி அதிகாரிகளின் தடை உத்தரவு காணமாக முடிவில் நிகழ்ச்சி மாற்றப்பட்டது. தமிழில் வேறு பாடல்களை மாணவர்கள் பாடவேண்டியதாயிற்று.

பல்லாயிரக் கணக்கான மைல்கள் தாண்டி வந்தும் சில சிங்கள மாணவர்களிடம் இனவெறி இருப்பது மிகவும் வருந்தக் கூடியது ஒன்றுகும்.

### காமன்வெல்த் ஆசிரியர் சங்கத்தினர்
### கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாடினர்

ஆண்டு தோறும் நடைபெறும் காமன்வெல்த் ஆசிரியர் சங்கத்தினரின் (Common--wealth Teachers Association) கிறிஸ்துமஸ் விழா இவ்வாண்டு டிசம்பர் 12ந் திகதி சனியன்று கென்சிங்ரனிலுள்ள காமன்வெல்த் இன்ஸ்டிடேடில் நடைபெற்றது. சிறப்பாக நடந்தேறிய இவ்விழாவில் இருநூறு பேர் பங்குபற்றியதாக சங்கத்தின் செயலாளர் திரு.தாமோதரம் லண்டன் முரசிற்கு தெரிவித்துள்ளார்.

### இலங்கையர் சங்கத்தினரின் சிறுவர் கிறிஸ்துமஸ் விழா

டிசம்பர் 13ந்திகதி ஞாயிறு அன்று ஐக்கிய இராய்ச்சிய இலங்கையர் சங்கத்தினர் (Association of Ceylonese in U.K.) வருடந்தோறும் நடத்தும் சிறுவர் கிறிஸ்துமஸ் விழாவை லண்டனிலுள்ள இலங்கை தேநீர் நிலையத்தில் கொண்டாடினர். இலங்கையர் சங்கம் பற்றிய விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு.பீ.செல்வராஜா

Vice President<br>
Association of Ceylonese in U.K.<br>
32 Marmora Road<br>
Dulwich, London. S.E.22

### லண்டனில் திருக்கார்த்திகை விழா

இங்கிலாந்தில் முதன்முறையாக பிரித்தானிய சைவ மாமன்றத்தினர் இம்மாதம் 13ந் திகதி ஞாயிறன்று திருக்கார்த்திகை விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். விழா நடைபெற்ற இடம் விம்பிள்டன் பார்க் மண்டபம். மன்றத்தின் உபதலைவர்களில் ஒருவரான சிவில் பொறியியலாளர் திரு.பேரின்பநாதன் அவர்களின் உபயத்தில் விழா நடைபெற்றது.

விழாவைத் தொடக்கி வைத்துப் பேசிய திரு.ஆறுமுகம் அவர்கள் மன்றத்தின் தலைவர் திரு.சபாபதிப்பிள்ளை அவர்கள் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் விரைவில் குணமாகிவர இறைவன் அருள் வேண்டுவோம் எனவும் கூறினர்.

முருகன் பூசையை உபதலைவர்களிலொருவரான டாக்டர்.நாராயண் ராவ் அவர்கள் நடத்த திருவாளர்கள்.வேதநாராயணன், சிவகுருநாதபிள்ளை, ஜெகதீசுவரம்பிள்ளை ஆகியோர் முருகார்ச்சனையில் பங்கு கொண்டனர். விழாவிற்கு வந்திருந்தோரைப் பரவசத்தில் ஆழ்த்தியது திருமதிகள்.ஜெயசீலன், கணேசநாதன், கருணனந்தன் ஆகியோரின் இன்னிசை முருக வழிபாடு.

## பரீட்சையில் சித்தியடைந்தோர்.

1. டாக்டர்.திருமதி.ஞானேஸ்வரி செல்லையா விஜயரத்தினம்.
இலங்கை மருத்துவக் கல்லூரி விரிவுரையாளரான டாக்.திருமதி.செல்லையா விஜயரத்தினம் லண்டன் பல்கலைக்கழகத்தின் Ph.D ( Pathology ) ஆராய்வில் சித்தியடைந்துள்ளார்.

2. டாகடர்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி.
இலங்கை மருத்துவ சேவையைச் சேர்ந்த டாக் எஸ்.கிருஷ்ணமூர்த்தி F.R.C.S.(Edin) முதல் தடவையில் சித்தியடைந்துள்ளார். சிறப்புப் பகுதி காது — மூக்கு — தொண்டை.

3. டாக்டர்.திருமதி.சாரதா இராஜசிம்மன்.
கலையரசு நாடகபுகழ் சொர்ணலிங்கத்தின் மகள் திருமதி.இர்ராஜசிம்மன் F.R.C.S.(Eng ) பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.சிறப்புப் பகுதி கண் மருத்துவம் ஆகும்.

4. டாக்டர்.பாலசிங்கம் தலையசிங்கம்.
இலங்கை மானிப்பாயைச் சேர்ந்த டாக்டர்.தலையசிங்கம் M.R.C.P (Edin ) பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

5. டாக்டர்.ஜே.ஜீ.சண்முகநாதன்.
லண்டன் D.A., பரீட்சையில் சித்தியடைந்துள்ள திருச்சியைச் சேர்ந்த டாக்டர்.சண்முகநாதன் இம்மாதம் தாயகம் திரும்புகின்றுர்.

6. டாக்டர்.மீனுட்சிசுந்தரம்.
சென்னை மருத்துவக் கல்லூரி விரிவுரையாளரான டாக்டர்.மீனுட்சிசுந்தரம் கொழும்புத் திட்டப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து இம்மாதம் தாயகம் திரும்புகின்றுர்.

---

## லண்டனில் ஆறுமுக நாவலர் விழா

லண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நவம்பர் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் அன்று ஈழம் கண்டெடுத்த தமிழ்ப் பெரியார் ஆறுமுக நாவலர் அவர்களுக்கு விழாக் கொண்டாடப்பட்டது. லண்டன் தமிழ்ச் சங்கத்தார் ஆறுமுக நாவலருக்கு விழாக் கொண்டாடுவது இதுவே முதன் முறை. விழா மகாத்மா காந்தி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

திருமதி.தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி அவர்களின் கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகியது. லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு.குமாரவேலு அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினுர். தேனினும் இனிய குரலில் திருமதி.பானுமதி சந்திரசேகரன் தமிழ்மொழிச் சிறப்புப் பற்றி பாடினுர்.திரு.முத்துக்குமாரசுவாமி அவர்கள் ஆறுமுக நாவலர் பற்றிய சொற்பொழிவு ஆற்றினுர். நாவலரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் சைவசமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய சேவைகள் பற்றியும் எடுத்துக் கூறினுர். முதன்முறையாக பைபிளை தமிழ் மொழியில் மொழிபெயர்த்த பெருமையும் நாவலரைச் சாரும் என்று அவர் எடுத்துரைத்தார்.

செல்வி பிரேமாவின் நடனங்கள் விழாவிற்கு உயிர் ஊட்டின.அழகான மந்தகாசமான மாலை நேரத்தில் அழகு மயில் நடனம் புரியும். இந்தத் துடியிடை மயிலாள் அழகுதமிழ் பாடல்களுக்கு நடனங்கள் ஆடினுர். திருமதி.கந்தையாவும் இராசநாயகமும் வீணை இசையை நல்கினர். சிறப்பான கர்னுடக இசையை அவர்கள் இசைத்த போது குழுமியிருந்தோர் உள்ளமெல்லாம் இசைக்கப்பட்டன.இலங்கை வானெலி புகழ் திருமதி பாக்யம் ஞானப்பிரகாசம் ஒரு கச்சேரியையே நடத்திவிட்டார்கள் என்ருல் மிகையாகாது.மோகனம்,காம்போதி,பூர்வகல்யாணி, நாட்டைக்குறிஞ்சி முதலிய ஜனரஞ்சகமான ராகங்களில் பாடல்களைப் பொழிந்தார்கள்.தனக்கு நல்ல இசை ஞானம் உள்ளது என்பதை நிரூபித்து விட்டார்கள்.இறுதியில் நாவலர் வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகள் கொண்ட நாடகமொன்றும் நடத்தப்பட்டது.நாடகத்தில் திருமதி.மூர்த்தி,திருவாளர்கள்.சிவகுருநாதபிள்ளை,சந்திரமோகன் ஆகியோர் பங்குகொண்டனர்.

பொதுவாக விழா சிறப்பாக அமைந்தது என்றே கூற வேண்டும்.ஆறுமுக நாவலர் அவர்களுக்கு விழாக் கொண்டாடிய தமிழ்ச் சங்கத்தினர் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கும் விழாக் கொண்டாடுவார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

— ஜெயசித்திரன்.

லண்டன் முரசு பிரசுரத்தின் பிரதம உரிமையாளர் திரு. சோ. சபாபதிப்பிள்ளை அவர்கள் கடுமையான சுகவீனம் காரணமாக கிங்ஸ்டன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சில நாட்கள் அபாய நிலையில் இருந்த அவரின் தேகநிலை தற்போது சுகமடைந்து வருகின்றது.

## மாணவருக்கு வார இறுதி வேலைவாய்ப்புகள்

வார இறுதிகளில் காவல் நிறுவனத்தில் வேலை செய்யும் வாய்ப்புகள் உள்ளன. இரவு வேலைகளில் நல்ல வசதிகளுடன் படிக்கக் கூடியதாகவுமுள்ளது. வார இறுதிகளில் கட்டாயமாகப் படித்துக் கொண்டே வேலை செய்யும் வாய்ப்புக்கள் மாணவருக்கு மிக உகந்ததல்லவா? விபரங்கட்கு Securicor நிறுவனத்தினருடன் தொடர்பு கொள்ளவும்:

(837 2324) Securicor Ltd.,
283 Grays Inn Rd, W.C.I.

## கிறிஸ்துமஸ் விழா

லண்டன் தமிழ்ச் சங்கத்தினர் கிறிஸ்துமஸ் விழாவை டிசம்பர் மாதம் 20ந்திகதி வெஸ்ட்போர்ண் பார்க் பப்டிஸ்ட் சேர்ச் மண்டபத்தில் கொண்டாடவிருக்கின்றனர். விழாவில் சங்கீதம், பாட்டு, தேநீர் விருந்து நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நேரம்: 2.45 மணி தொடக்கம் 5.45 வரை. இடம்: Westbourn Park Baptist
Church Hall,
Porchester Rd, W.2.

## திருவெம்பாவை

பிரித்தானிய சைவ மாமன்றத்தின் ஆதரவில் திருவெம்பாவை பூசை வழிபாடு ஜனவரி மாதம் 10ந் திகதியன்று நடைபெறவிருக்கின்றது. கூடிய விபரங்கட்குத் தொடர்பு கொள்க:

திரு. ச. வேதநாராயணன், செயலாளர்,
பிரித்தானிய சைவமாமன்றம்,
48, Geary Road, (452 3695)
London.N.W.6.

## பேய்ஸ்வாட்டர் மாணவர் நிலையம்

வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களுக்கென மாணவர் நிலையமொன்று பேய்ஸ்வாட்டர் பகுதியில் திறக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 1ந்திகதி மாணவர் ஒன்று சேர்தல் (Get together) நடைபெறவிருப்பதாக மேற்படி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். விபரங்கட்கு: Bayswater Student Centre,
49/5I Porchester Road,
London.W.2.

## எதிர்பாருங்கள் ************ உயர்ந்த மனிதன் ************ பொங்கல் வெளியீடு

சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி, வாணிசிறீ, சிவ குமார், பாரதி, சுந்தரராஜன் ஆகியோர் நடித்த உயர்ந்த மனிதன் படம் தமிழ் திரைப்படக் கலாச்சார சங்கத்தினரால் பொங்கல் வெளியீடாகத் திரையிடப்படும். விபரங்களை எதிர்பாருங்கள்.

## ***** இங்கிலாந்தின் முதல் இந்திப்படம் *****

இங்கிலாந்திலேயே முழுமையாக தயாரிக்கப்பட்ட முதல் இந்திப் படமான பசந்த் அப்னி அப்னி (Pasand Apni Apni) இந்தித் திரைப்பட தயாரிப்பில் ஒரு புதுமையைச் சாதித்து விட்டது. இங்கு வதியும் இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்ட இப்படம் டிசம்பர் மாத இறுதியில் வெளிவரவிருக்கின்றது. ப்ரிஜ் கத்யால் இயக்குனராக விளங்கும் பசந்த் அப்னி அப்னியை தயாரித்தவர் சந்தோக் உப்பல் என்பவராகும்.

## சந்தாதாரருக்குச் சலுகை

லண்டன் முரசின் வெளிநாட்டு அபிமானிகளின் பேரர்தரவிறல் லண்டன் முரசு சந்தாதாரருக்கு மட்டும் மிகக் குறைந்த செலவில் பின்வரும் சஞ்சிகைகள் வரவழைத்துக் கொடுக்கப்படுகின்றன. சஞ்சிகைகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்கள் பின்வருமாறு:-

| | கப்பல் அஞ்சல் மூலம் | விமான அஞ்சல் மூலம் |
|---|---|---|
| | (ஆறு மாதத்திற்கான கட்டணம்) | |
| பொம்மை, கலைக்கதிர், கலைமகள், கதம்பம் | 7/6 | 15/- |
| | (அஞ்சல் செலவு உட்பட) | |
| மஞ்சரி | 6/- | 9/- |

கப்பல் அஞ்சல் மூலம் வரும் சஞ்சிகைகள் 8 வாரம் கழித்தே பெறமுடியும்

### *** பொங்கல், புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் ***

ஏற்கனவே அறிவித்துள்ளபடி பொங்கல், புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் லண்டன் முரசு வாசகர்களுக்கென பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்டுள்ளன.

வாழ்த்து அட்டைகளின் விலை:

சாதாரண அளவு அட்டை -/6d
பெரிய அளவு அட்டை -/9d (அஞ்சல் செலவு உட்பட)

வாழ்த்து அட்டைகள் விண்ணப்பிப்போர் தலா 6 அட்டைகளுக்குக் குறையாது விண்ணப்பித்தல் வேண்டும்.

---

### கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள்.

"இம் மார்கழித் திங்களில் வரும் மங்கல கிறிஸ்துமஸ்ஸிலும், வளம் பொருந்திய புத்தாண்டிலும் இன்புற்றிருக்க" என்று தனது வாழ்த்துக்களை லண்டன் முரசு, வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

---

### லண்டன் முரசு பொங்கல் மலர்

லண்டன் முரசு தைமாத இதழ் பொங்கல் சிறப்பு மலராக வெளிவரும் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

உஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉ

### புத்துலகத் தேவைக்கு தமிழ் விருத்தி

புலவர், வித்துவான் பொற்கோ அவர்களின் "செந்தமிழ்" என்னும் கட்டுரைத் தொடர் இம்மாத இதழில் ஆரம்பமாகின்றது. இக் கட்டுரைத் தொடரில் "புத்துலகத் தேவைக்கு தமிழ் விருத்தி" தொடர்புடைய கருத்துக்கள் வெளியிடப் படும்.

உஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉஉ

### தமிழ் சேவைக்கு நன்றி

இம்மாத முரசு இதழ் உருவாகுவதற்கு தமிழுதவி புரிந்த திரு. ச. வேதநாராயணன் அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகும்.

---


# கழிவு நீரில் கற்பகம்

மனிதனது அன்றாட அத்தியாவசியத் தேவைகளில் மிகவும் முக்கியமானது நீர். நீர் இன்றி மனித வாழ்வே இல்லை. 'நீரின்றி அமையா உலகு' என்றே வள்ளுவப் பெருந்தகையும் கூறியுள்ளார். பூமியின் முக்கால் பங்கும் நீர்தான். ஆனால் நீரை மனித இனம் எத்துணை விவேகமாகப் பயன் படுத்தி வருகிறது என்பது தான் ஆராய்ச்சிக்குரிய விடயம். வெறும் உணவுப் பொருளாக மட்டும் இன்றி மனிதனது உபயோகத்தில் நீர் பெரும் பங்கு வகிக்கிறது. குளித்தல், சுத்தம் செய்தல், முதலிய வகைகளில் ஒவ்வொரு மனிதனும் கழிவாக நீரை வெளியேற்றிக் கொண்டேதான் வருகிறான். தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால் உலகில் இயங்கி வரும் தொழில்களில் நீரைப் பயன் படுத்தாத தொழிலேயில்லையெனலாம். வேதி இயல் ( Chemical ) ,செய்ம் முறை(Process ), உணவுத்தொழில் ( Food Industries) ,காகிதத் தொழில், இரும்பு மற்றும் உலோகத் தொழில், இன்னும் தொழில் யுகத்தின் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் வெளியேற்றப் படும் கழிவு நீரின் பரிமாணம் கணக்கில் அடங்காது. இத்தகைய கழிவு நீர் ஆற்றோடு கலந்து பின்னர் ஒரு பயனும் இன்றி கடலோடு கலந்து விடுகிறது. நீர் மட்டும் பயனின்றிப் போய் விடுகிறது என்பது ஒரு புறம். மற்றும் ஒரு புறம் எத்துணையோ இன்றியமையாத பொருள்கள், மூலங்கள், உப்புக்கள் எல்லாம் சேதமாக்கப் பட்டு கடலோடு மாயமாக மறைந்து விடுகின்றன.

உதாரணத்திற்கு காகிதத் தொழிற்சாலைகளில் இருந்து மட்டும் ஆண்டு ஒன்றிற்கு சுமார் 700கோடி கன மீட்டர் ( 700 million cubic meters) கழிவு நீர் வெளியேற்றப் படுகிறது. இதில் சுமார் 25 லட்சம் டன்( 2.5 million Ton) இரசாயனப் பொருள்கள் பயன் படுத்தப் படாது கடலோடு கலந்து விடுகின்றன. ஒரு தொழிலில் மட்டும் இப்படியென்றால் , பல ஆயிரக் கணக்கான தொழில்களில் வெளியாகும் கழிவு நீரையும் இரசாயனப் பொருள்களையும் எண்ணிப் பார்த்தால் நாம் நீரை சரியான முறையில் பயன் படுத்துகிறோமா என்றுதான் கேட்க தோன்றுகிறது.

இதைப் பற்றி விஞ்ஞானிகள் எண்ணாமல் இல்லை, கழிவு நீரைக் காய்ச்சி, ஆவியாக்கி , வடிகட்டி, மீண்டும் குளிர்ச்சி செய்து நீராக்கிப் பயன் படுத்த வேண்டுமானால்; உண்டாகும்செலவு தேவையான எந்திரங்கள் இவற்றை எண்ணிப் பார்த்து நீரை மீண்டும் பயன் படுத்துவது தேவையில்லை என்றே கருதி வந்தனர்.

ஆனால் அண்மையில் வெளியான ஆராய்ச்சிகளின் பயனாக ஒரு புதிய முறை உருவாகியுள்ளது. இதற்கு எதிர் ஊடுபரவல் (Reverse Osmosis) என்று பெயர். இந்த முறை மிகவும் எளிதானது. அதிகப் பணச் செலவும் ஆகாது. ஆரம்பத்தில் அசுத்தத் தண்ணீரைப் பிரிக்கவும் , உப்பு நீரைப் பிரிக்கவும் பயன் பட்டு வந்த இந்த முறையை அடிப்படையாகக் கொண்டு இப்போது பல துறைகளிலும் ஆராய்ச்சி நடத்தப் பட்டு வருகின்றது.




கரைசல் அல்லது கழிவு நீரை கசிவுத் தன்மையுள்ள சவ்வு மூலம் (Semi Permiable Membrane ) அழுத்தத்தில் செலுத்த வேண்டும். இந்த முறைக்கு அதிகமான சக்தி தேவையில்லை. வெப்பம் தேவையில்லை. சுத்தமான நீர் சவ்வு மூலம் வெளியாகி விடும். அசுத்தம் படத்தில் காட்டியபடி வெளியேற்றப் படும். சில தொழில்களில் இந்த அசுத்தம் இன்றியமையாத உப்புக்களாக இருக்கும். ஆகவே அவற்றையும் பயன் படுத்தலாம்.

இந்த முறையைப் பயன் படுத்தி இப்போது பாற்கட்டி( Cheese ) தொழிலில் ஆராய்ச்சி நடந்து வருகிறது. யார் கண்டார்கள்? இன்னும் பத்து ஆண்டுகளில் இந்த முறையின் முன்னேற்றத்தால் உணவுப் பொருள்கள் எல்லாமே மலிவாகக் கிடைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இந்தியா போன்ற முன்னேறி வரும் நாடுகளில் நீரின் தேவை சொல்லில் அடங்காது. உப்பான கடல் நீரைச் சுத்தப் படுத்தி பயிர்த் தொழிலுக்குப் பயன் படுத்தவும் இம்முறை பயன் படலாமே. மீதமாகும் உப்புக்களும், மூலங்களும் தொழிற்சாலைகளுக்கும் பயன் படும். முடிவு என்னவோ உருவாகி வரும் விஞ்ஞானிகள் கையில்தான் உள்ளது. கழிவு நீரில் கற்பகத்தைக் காண்போமா ?

சு. க. சுப்பிரமணியன் B.E., D.S.S.,

## சிறு துளி பெரு வெள்ளம்.

( சிறுதுளி பெருவெள்ளம் பகுதியில் விஞ்ஞானம்—பொறியியல்—பொருளாதாரம்; முதலிய துறைகளில் தகவல்கள் வெளியிடப்படும். புதிய தயாரிப்புக்கள், ஆய்வுக் கருத்துக்கள், பொருட்காட்சிகளும் கருத்தரங்களும் ஆகியவை இப்பகுதியில் இடம்பெறும். )

### வானவெளி ஊடுறுவலில் கூட்டு முயற்சி

ஒன்றன் பின் ஒன்றாக வானவெளியில் ரஷ்யாவும் அமெரிக்காவும் பெரும் சாதனைகளைப் புரிந்து வருகின்றன. ரஷ்யா தற்போது அமெரிக்காவை அணுகி ஒரு கூட்டு முயற்சியைத் தோற்றுவிக்க முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

### வானவெளி ஆராய்ச்சியில் ஒரு புதுத் திருப்பம்

தற்போது வானவெளி ஆராய்ச்சிகளுக்கு அனுப்பப் படும் விமானிகளும், கருவிகளும் அவைகள் பூமிக்குத் திரும்பி வந்ததும் பயன்படுத்தப்படக் கூடியனவாக இருப்பதில்லை. மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் ஒரு மாதிரியை மேற்கு ஜெர்மனியில் தயாரித்து வருகிறார்கள்.

### காற்றுக் கசிவு கண்டுபிடித்தல் — கேளா ஒலித் தத்துவம்

( Ultra sonic Leak Detector )

சாதாரண கையின்விளக்கின் அளவே உள்ள இந்தக் கசிவுக் கண்டு பிடிப்புக் கருவியினால் காற்று, வாயு (Air or Gas) கசிவுகளை சுலபமாகக் கண்டு பிடிக்கலாம். இந்தக் கருவி வெகு விரைவில் புழக்கத்திற்கு வரும் எனத் தெரிகிறது.

### சந்திரனில் தண்ணீர் உள்ளதா?

இது வரை சந்திரனில் தண்ணீர் இருப்பதாக நிரூபிக்கப் படவில்லை. 1971ல் பிப்ரவரி மாதம் அப்போலோ 14ல் செல்லவிருக்கும் வானவெளி வீரர்கள் சந்திரனில் நீர் உள்ளதா? என்று ஆராய்ச்சி செய்வார்கள்.

### இயந்திரத் தண்டு இல்லாமல் மோட்டார் இயக்கம்

(Shaftless Ste ring Gear)

மகிழ்வூர்திகளில் (Cars) விபத்து நடக்கும் போது, இயக்கத் தண்டு நெஞ்சில் தைத்து உயிர் இழந்தோர் பலர். இக்குறையைப் போக்க வேண்டி இயக்கத் தண்டு இல்லாமல், அலைவு ஈர்ப்பு முறையில் (Vibration Absorption) புதிய இயக்கும்முறை ஒன்றை ஏக்கில்ஸ், புல்லாக் (Accles and Pullock) நிறுவனத்தார் தயாரித்து வருகிறார்கள்.

### பொருட்காட்சிகளும் கருத்தரங்குகளும்

*** கம்பியூட்டர் பொருட்காட்சி (DataFair 7I)

எதிர்வரும் மார்ச்சு 29லிருந்து ஏப்பிரல் 2வரை ஐரோப்பிய கம்பியூட்டர் பொருட்காட்சியும் கருத்தரங்கும் நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் (Nottingham Uni--versity ) நடைபெறவிருக்கின்றது. பொருட்காட்சியில் பல கம்பியூட்டர் நிறுவனங்கள் கலந்து கொள்ளவிருக்கின்றன. கூடிய விபரங்கட்கு தொடர்பு கொள்க:

The British Computer Society
29 Portland Place, London. W.I.

*** எண்முறை கருத்தரங்கு (Numerical Methods Symposium ) ஒன்று ஜனவரி 7,8 திகதிகளில் Institute of Mathematics & its Applications நிலையத்தினரால் National Physical Laboratory, Teddington, Middx -ல் நடத்தப்படும்.

*** உருவமைப்பு பொறியியலாளர் பொருட்காட்சி (Model Engineer Exhibi--tion) டிசம்பர் 29ந் திகதிக்கும் ஜனவரி 9ந் திகதிக்கும் இடையே (ஞாயிறு தவிர Seymour Hall, Seymour Place, W.I - ல் இடம்பெறும்.

# தமிழின் சிறப்பு

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

## 9. ஒலிச் சிறப்பு.

1. தமிழ் மொழியின் ஒலியே ஒரு தனி ஒலி. அது மிக இனிமையானதொரு ஒலி. தமிழுக்கு உள்ள சிறப்புகளில் அதன் ஒலிச் சிறப்பும் ஒன்று.

2. அதன் உயிர் எழுத்துக்கள் அனைத்தும் உதடுகளாலேயே ஒலிக்கக் கூடியவை. பல்லுக்கும், தொண்டைக்கும் வேலையேயில்லை.

3. இரண்டு உதடுகளையும் திறக்கும் பொழுதே "அ" ஒலி உண்டாகிவிடுகின்றது. இரண்டு உதடுகளையும் இளிக்கும் பொழுது "இ" ஒலி உண்டாகிறது. கீழ் உதட்டைச் சாய்க்கும் பொழுது "எ" ஒலி உண்டாகிறது. இரண்டு உதடுகளையும் குவிக்கும் பொழுது "உ" ஒலி உண்டாகிறது. அவற்றை அப்படியே உயர்த்தும் பொழுது "ஒ" ஒலி உண்டாகிறது. ஆ,ஊ,ஈ,ஏ,ஓ என்பன இவற்றின் நீண்ட ஒலிகளே. இவை முறையே "குறில்", "நெடில்" என ஆகும். இந்தப் பத்து எழுத்துகளுக்குள்ளாகவே தமிழின் உயிர் ஒலிகள் அனைத்தும் அடங்கிவிட்டன. "அய்", "அவ்", "அக்", என்ற மூன்றுங் கூட்டு எழுத்துக்களும், கூட்டு ஒலியுமாகும்.

4. இந்த உயிரோடு சேர்ந்து ஒலிக்கக்கூடிய தமிழ் ஒலிக்குரிய உடம்பு எழுத்துக்கள் 18 மட்டுமே. இதனாலேயே இவ்வெழுத்துக்களை "மெய்" யெனக் கூறுவர். இவற்றுள்ளும் வலிந்து ஒலிக்கக்கூடியவை 6, "க்,ச்,ட்,த்,ப்,ற்." மெலிந்து ஒலிக்கக்கூடியவை 6 "ங்,ஞ்,ந்,ம்,ண்,ன்." இரண்டிற்கும் இடையே ஒலிக்கக்கூடியவை 6. "ய்,ர்,ல்,வ்,ழ்,ள்". இவற்றை வலிந்தும், மெலிந்தும், இடையிலும் ஒலிக்க வேண்டு என மூன்று வகையாகப் பிரித்து அவற்றை மூன்று இனமாக்கி அவற்றிற்கு வல்லினம், இடையினம், மெல்லினம் எனப் பெயரிடப்பட்டிருப்பது ஒரு வியப்பு. அதைவிட வியப்புஅதிலுள்ள எந்த இனமும் ஏற்றத் தாழ்வை அடையாமல் ஒவ்வொரு இனமும் அவ்வாறு எழுத்துக்களையும், பெற்றிருப்பது.

5. உயிர் ஒலிகள் அனைத்தும் உதடுகளால் மட்டும் ஒலிக்கக்கூடியவை என்பது கண்டோம். இந்த "மெய்" ஒலிகள் அனைத்தும் உதடு, பல், நாக்கு, மூக்கு, தொண்டைகளால் மட்டுமே ஒலிக்கக் கூடியவை. இவற்றுள் எந்த ஒலியை ஒலிக்கவும் தொண்டைக்குக் கீழ் வேலையேயில்லை. சில மொழி ஒலிகளை அடி வயிற்றிலிருந்து ஓசைகளைக் கிளப்பி ஹ, ஹா, க்ஷ, க்ஷா என ஒலித்தாக வேண்டும். இத்தொல்லை தமிழ் ஒலிக்கு இல்லை.

6. ஒவ்வொரு மெய்யின் மீதும், ஒவ்வொரு உயிர் ஏற உயிர் மெய் எழுத்தும், ஒலியும் தோன்றும். அவை க்உ—கு ப்இ—பி ச்எ—செ என்பன. இவ்வாறு 18 மெய்களிலும் 12 உயிர்கள் ஏறி 216 எழுத்துக்களாக, ஒலிகளாக அமைந்திருக்கின்றன. இது தமிழ் மொழிக்குள்ள சிறப்பு. இவ்வெழுத்துக்களை உயிர்மெய்யெழுத்துக்கள் என்பர். ஆங்கிலத்தில் இத்தகைய உயிர் மெய்யெழுத்துக்கள் தனியாக இல்லாமையால் அவ்விரண்டையுமே அவர்கள் தனித்தனியே சேர்த்து ஒலித்து வருகிறார்கள். "மி" என எழுத எம்.இ. என இரண்டு எழுத்தையும், "கு" என எழுத கே.உ. என இரண்டு எழுத்தையும் பயன் படுத்தி வருவதைக் காணலாம்.

7. "ழ" என ஒலிக்க உலகின் எம்மொழியிலும் எழுத்துக்களில்லை. "ழ" ஒலி தமிழின் தனிச் சிறப்பான ஒலி. இதனாலேயே தமிழ் அறிஞர்கள் இதனைச் சிறப்பு ழ கரம் எனக் கூறுவதுண்டு. மொழியின் பெயராகிய "தமிழ்" என்ற சொல்லிலும், "பேசு" என்கிற "மொழி" என்ற சொல்லிலும் இந்த "ழ" ஒலி ஒலித்துக் கொண்டிருப்பது வியப்பிற்குரியதாகும்.

8. வல்லோசையுடைய எழுத்துக்கள் ஆறில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் மூன்று. அவை க,த,ப, என்பன. இம்மூன்றுமே மொழிக்கு முன்னே வரும் பொழுது வல்லொலியும், இடையில் வரும் பொழுது மெல்லொலியும் அமைந்து வரும். இவ்வுண்மையை "காகம்" "தாதன்" "பாபம்" என்ற சொற்களை ஒலித்துக் காணலாம். இது தமிழ் ஒலிக்கு இயல்பாகவே அமைந்துள்ள ஒரு தனிச் சிறப்பாகும்.

9. இவை தவிர "ங் ஞ்" என்ற இரு எழுத்துகள் தமிழில் இருந்து "க" வுக்கும் "ச" வுக்கும் ஒரு புதிய ஒலியை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. கங்கணம், பங்கஜம், சங்கு வங்கி என்பதிலுள்ள "க" வின் ஒலியைக் காணுங்கள். அவ்வாறே பஞ்சு, செஞ்சி என்பதிலுள்ள "ச" வின் புதிய ஒலியைக் கண்டு மகிழுங்கள். இவை G ன் J ன் ஒலிகள்.

10. தமிழ் எழுத்துக்களை மட்டும் புரிந்து கொண்டால் எவ்வளவு பெரிய நூல்களையும் படித்துவிடலாம். காரணம் அதிலுள்ள எந்த எழுத்துக்கும் இரண்டு மாறுபட்ட ஒலிகளில்லை. அவ்வாறு ஆங்கில எழுத்துக்களை மட்டும் புரிந்து கொண்டு ஆங்கிலநூல் எதையும் படித்துவிடமுடியாது. அதிலுள்ள "ஸி" என்ற எழுத்துக்கு " ஸ்" ஒலியும் "க்" ஒலியும் வரும். இவ்வுண்மையை பாலஸ், அக்கவுண்ட் என்பதால் நன்கறியலாம். அவ்வாறே " ஜி" என்ற எழுத்துக்கு " ஜ்" ஒலியும், "க்" ஒலியும் வரும். இவற்றை "கெம்" என்பதாலும், "ஜெம்" என்பதாலும் அறியலாம். சில ஆங்கிலச் சொற்களுக்கு எழுத்து இருக்கும், ஒலியிருக்காது. டால்க் என எழுதி "டாக்" எனவும் வால்க் என எழுதி "வாக்" எனவும் ஒலித்தாகவேண்டும். "டி" எழுத்துக்கு சிலவிடத்தில் ட் ஒலியும், சிலவிடத்தில் "ஷ்" ஒலியும் வரும். இதனை மொடிவ், மோஷன் என்பதால் நன்கறியலாம். தமிழ் ஒலியில் இத்தொல்லையே இல்லை. "எஸ்.ஏ.என்" என்பதையும், " எஸ்.யூ. என்" என்பதையும், " எஸ்.ஒ.என் " என்பதையும் "சன்" என்றே ஒலித்தாக வேண்டும். இந்த மாறுபட்ட எழுத்துக்களை எழுதி, ஒன்றுபட்ட ஒலியால் ஒலித்து, வேறுபட்ட பொருள்களைக் காண வேண்டும். ஏன் ? எப்படி ? எதற்காக இப்படி ஒலித்தாக வேண்டும் ? என்பதற்கு விதியும் இல்லை. இத் தொல்லை தமிழ் ஒலிக்கு இல்லை.

11. தமிழில் ஒலி இலக்கணம் என்றுண்டு. அது எந்த எழுத்தை எவ்வளவுகாலம் ஒலிக்க வேண்டும் என்பது. "அ,இ,உ,எ,ஒ " என்ற குறில் எழுத்துக்களை ஒலிக்கும் அளவு ஒரு மாத்திரை. "ஆ,ஈ,ஊ,ஏ,ஓ" என்ற நெடில் எழுத்துக்களை ஒலிக்கவேண்டிய கால அளவு இரண்டு மாத்திரை "க்,ப்,ம்,ச்,ட்,". போன்ற மெய்யெழுத்துக்களை ஒலிக்கும் கால அளவு அரை மாத்திரை. மாத்திரை என்பது நொடிப் பொழுது. அது நடு விரலையும் பெருவிரலையும் சேர்த்து நொடிக்கும் காலம். இந்த நொடிப் பொழுதையும் கால், அரை, முக்கால், ஒன்று என நான்காகப் பிரித்துக் கணக்கிட்டிருப்பது பெரு வியப்பைத் தருவதாகும். நொடிக்க வேண்டும் என்று எண்ணுவது கால் மாத்திரை, இரு விரல்களையும் தூக்குவது அரை மாத்திரை, சேர்த்து அழுத்துவது முக்கால் மாத்திரை. நொடிப்பது முழு மாத்திரை என்றாகும். இதற்குரிய இலக்கண நூற்பா, "எண்ணல் கால், எடுத்தல் அரை, முறுக்கல் முக்கால், விடுத்தல் ஒன்று" என்பதே. இது போன்று தமிழ் மொழிக்கு ஒலி இலக்கணம் அமைந்து மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாயின.

12. அலறுகிறான், அழுதான், அறைந்தான், இளித்தான், இசைத்தான், இயம்புகிறான், உறுமுகிறான், உளறுகிறான், ஊளையிட்டான், கத்துகிறான், கனைத்தான், கிளறுகிறான், கீச்சிட்டான், கூறுகிறான், கூவுகிறான், சப்புகிறான், சாற்றுகிறான், சிரித்தான், சீறுகிறான், செப்புகிறான், "சொன்னான்," படித்தான், பழித்தான், பாடுகிறான், பிதற்றுகிறான், பேசுகிறான், புலம்புகிறான், விளக்குகிறான், விளம்புகிறான், வைதான், வாழ்த்துகிறான், என்ற சொற்கள் அனைத்தும் சொன்னான் என்ற ஒரே பொருளில் வருவன எனினும், அவை தமிழின் ஒலியையும், ஒலியின் தரத்தையும், ஒலிப்பவனது உதட்டையும், முகத்தையும் மட்டுமல்ல, அவனது உள்ளத்தையும் கூடக் காட்டுவனவாகும். இவை அனைத்திற்கும் சப்தித்தான், கர்ஜித்தான் என்ற வடமொழிச் சொற்கள் பொருந்துமா? என்று பாருங்கள். இவற்றிற்கு ஆங்கிலத்தில் சொற்களுண்டா ? எனத் தேடுங்கள். இவ்வொலிகளை ஒலிக்க, குறிக்க இந்தியில் சொற்கள் இருக்குமா ? என எண்ணிப் பாருங்கள். இவை போன்ற பலவற்றாலும் தமிழ் எழுத்தின் ஒலியையும், தமிழ் மொழியின் ஒலியையும், தமிழ் ஒலியின் தனிச் சிறப்பையும் ஒருவாறு காணலாம். இது தமிழின் ஒலிச் சிறப்பு ஆகும்.

---

லண்டன் முரசு பேனா நண்பர்கள் பகுதி

| | |
|---|---|
| 1. செல்வி. புஷ்பராணி சிதம்பரம் (வயது 19)<br>மயிலிட்டிக்கரை, மயிலிட்டி,<br>இலங்கை. | கவிதை, இலக்கியம், நாவல், தமிழ்,<br>கடிதத்தொடர்பு. |
| 2. சா. விசயன் ( வயது 19 )<br>21 இளங்கோ இல்லம்,<br>அண்ணாமலை பல்கலைக்கழகம்,<br>அண்ணாமலைநகர், தமிழ்நாடு, இந்தியா. | ஓவியம் வரைதல், சிற்பம் வடித்தல்,<br>கித்தார் வாசித்தல், பேனா நட்பு. |
| 3. எம். கே. ஆர். கோவிந்த்<br>செயலாளர், கௌரி பேனா நண்பர் சங்கம்,<br>96, மெயின் வீதி,<br>இறக்குவானை, இலங்கை. | பேனா நண்பர்கள் சங்கம் —<br>உலகெங்கிருந்தும் பேனா நண்பர்கள்<br>தேவை. |

அன்புள்ள ஆசிரியருக்கு.....

கார்த்திகை இதழில் திரு.சாமி அவர்கள் இலங்கையிலிருந்து 60000 மக்களை அந்தமான் தீவில் விடுவதைவிட தமிழ் நாட்டில் கொண்டுவந்து விடுவதுதான் சரியென்று கூறியுள்ளார் இலங்கை வாழ் தமிழர்கள் இலங்கையின் முன்னேற்றத்திற்கும்,தேயிலைத்தோட்ட அமைப்பிற்கும் காரணமாவார்கள் என்றபடியால் அவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவது முறையல்ல. அந்தமான் தீவுகள் நல்ல இயற்கை வளம் பொருந்தியதும் மற்றும் நிலப்பரப்பைக் கொண்டதுமான தீவுகள். 1968ம் வருட சனத்தொகை மதிப்பீட்டின்படி 82000 ஆகும். மொத்த நிலப்பரப்பு 3215 ச.மைல்கள். தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து பெருமளவில் அந்தமான் தீவுகளில் குடியேறினால் எதிர்காலத்தில் தமிழர்கள் பலவற்றை சாதிக்கலாம்.மேலும் இந்திய சமுத்திரத்தின் முக்கியமான ( Strategic ) பகுதியில் தமிழர்கள் தமிழ்க்கொடியை ஏற்றலாமல்லவா ?

லண்டன் கி.4. டாக்டர்.ஏ.திருவேங்கடம்

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே.

புறநானூற்றில் உள்ள இந்த அடிகள் சென்ற இதழில் வந்த திரு.வைரவமூர்த்தி அவர்களின் கடிதம் கண்டபோது என்னுள் எழுந்தன. சிறந்த ஒரு சிந்தனையை நிறைந்த மனதுடன் வெளியிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். இந்த ஆலோசனையைச் செயற்படுத்த வெளிநாட்டில் வேலைபார்க்கும் தமிழர்கள் உளத்தால் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இதற்கு ஒரு குழு அமைத்து நிதி சேர்க்கலாம். மாணவர்களை கல்வித் தகைமைகளுடனும் நற்சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கச் செய்து வருடந்தோறும் சிலரைத் தெரிவுசெய்து இங்கழைத்துக் கல்வி கற்க வைக்கலாம். பின்னர் இங்கேயே அவர்களை வேலைக்கமர்த்தி கடனைத் திரும்பப்பெற வாய்ப்பு ஏற்படுத்தலாம். கடன் வழங்கும்போது ஒழுங்காகக் கல்வி கற்கவும் கடன் திருப்பிக் கொடுக்கவும் மாணவரிடம் உறுதி வாங்கி செயற்படுத்தினால் நன்று என்று எண்ணுகின்றேன்.திரு வைரவமூர்த்தி அவர்களின் முகவரியை வெளியிட்டு வேறும் முன்வரக்கூடியவர்களின் தொடர்புகளை ஏற்படுத்துவதை வரவேற்கின்றேன்.

லண்டன் தெ.மே.20 க.ஜெகதீஸ்வரம்பிள்ளை

தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு வந்துகொண்டிருந்த தமிழ் சஞ்சிகைகளின் இறக்குமதியை நிறுத்தி எம்மை மதிகலங்க வைத்துவிட்டது நமது சிங்கள அரசு. தமிழனின் அறிவு விசாலமடைவதைத் தடுக்க சிங்கள அரசின் அடக்குமுறைச் சட்டம் அப்படி. அதற்கும் ஆலவட்டம் பிடிக்க ஓர் தமிழ் அமைச்சரும் இரு தமிழ் பேசும் இஸ்லாமிய பிரதிநிதிகளும் கூடவே இருக்கும் போது எப்படித்தான் தமிழினம் தன்மானத்தோடு வாழ்வது.தமிழ் வாசகர்களின் ஏகோபித்த எதிர்ப்பையோ, நாடாளுமன்ற தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆட்சேபத்தையோ சட்டைசெய்யாது தமிழ் சஞ்சிகைகளின் இறக்குமதியை தடைசெய்துள்ள கொடுமையை யாரிடம் போய் முறையிடுவது. அதற்கு துணை நிற்கும் தமிழமைச்சரை என்னவென்று அழைப்பது என்று ஒவ்வொரு ஈழத்தமிழனும் கொதித்துக்கொண்டிருக்கின்றான். இனிமேலும் எங்கள் நிலை என்னவாகுமோ.

தெனியாய,இலங்கை. வி.சி.விக்டர்

வளமற்ற சிங்களத்தால் பல வளங்கொண்ட இனிய தமிழ் அல்லலுறும் இவ்வேளையிலே எந்தமிழன்னையைக் காட்டிக்கொடுக்கும் பல காக்கை வன்னியர்கள்,எட்டப்பர்கள் பலரிருக்கும் இன்றைய சூழ்நிலையிலே, தமிழன்னையையொழித்திட மாற்றார் முனைய,இல்லை குழிதோண்டிப் புதைத்தால் என்ன என்று காட்டிக்கொடுக்கும் இந்தக் கும்பலினாலேயே ஈழத்தில் தமிழ் மாதா கண்ணீர் சிந்தும் கொடிய வேளையிலே தீஞ்சுவை ஏடாம் லண்டன் முரசு ஆங்கில நாட்டிலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆகத் தீவிரமாக வளர்ந்துவரும் செய்தி கேட்டால் என் போன்ற தமிழுணர்ச்சி கொண்டவர்க்கு எப்படி இருக்கும் இழந்த மணி பெற்ற ஒருவன் அடையும் மகிழ்ச்சியை விடப்பலகோடி மடங்காகும் என் போன்றோரின் மகிழ்ச்சி.பெருகிவரும் தமிழுணர்ச்சிக்குத் தடை போடும் எம்நாட்டு அரசாங்கம் இனிமேல் தமிழர்கள் அனைவரும் வெளிநாடுகளில் வதியும் தமிழர்களுடன் தொடர்புகொள்ளக்கூடாது என்று தடுத்தால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை. இன்றைய போக்கைத் துருவிப் பார்க்கும் பொழுது அப்படித்தான் தோன்றுகிறது.தமிழ் சஞ்சிகைகளுக்கும்,திரைப்படத்திற்கும் தடை விதிப்பவர்கள் இப்படியும் செய்ய மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம் உலகெங்கும் பரந்து வாழும் வீறு கொண்ட தமிழர்கள் ஒன்றுபட்டால்,அவர்களை அசைக்க முடியுமா ?தமிழர் இனத்தால்,மொழியில் பாரபட்சப்படுத்தப்படுவார்களா ? என்று,தமிழர்கள் தங்களுக்குள் காட்டும் பல பூசல்களையும் மறந்து ஒற்றுமையாக வாழ்வார்களோ,அன்றுதான் தமிழன்னை தன்மானத்துடன் தலைநிமிர்ந்து தரணியாள்வாள்.எனவே,வீரத்தமிழ் இளைஞர்களே !

தமிழ் மங்கையரே! தமிழ்ப்பெருங்குடிமக்களே! தோள்தட்டி ஆர்ப்பரித்துத் தமிழின எழுச்சிக்குப் பாடுபடுவோம் வாரீர்! உயிர் கொடுக்கவும் தயங்காது முன்னேறுவோம் இலட்சியப் பாதை நோக்கி! என்று தங்கள் செந்தமிழ் ஏட்டின் வாயிலாக ஒவ்வொரு தமிழ்நெஞ்சங்களிலும் புகுந்து கூறவேண்டும் போலிருக்கின்றது.

தமிழ் மகள்,
செல்வி.சி.புஷ்பராணி

மயிலிட்டி, இலங்கை.

இலங்கையில் இருக்கும் போது கலைக்கதிர் சஞ்சிகையை தொடர்ந்து வாசித்து வந்து, இங்கு பெறமுடியாது இருந்த நான், தங்கள் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை வாசித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

போல்டன், லங்காஷயர். ச.செல்வகுமாரன்.

உலகெலாம் புகழ் மணக்க லண்டன் மாநகரிலிருந்து லண்டன் முரசு என்பதோர் தீந்தமிழ்த் திங்களேடு வெளியீடு கண்டு மகிழ்வு கொண்டு எம் உள்ளம் கனிந்த நல் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்ளுகிறேன்.

வெள்ளாளன் விளை, தமிழ்நாடு. செ.தே.சொகுசா.

தாய் நாட்டிலிருந்து வெகு தொலைவிலிருக்கும் என் போன்றவர்க்கு தமிழ் ஏடுகளைப் படிக்கும் வாய்ப்பை அளிக்கும் தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

றொட்வெய்ல், மே.ஜேர்மனி. எம்.சுந்தரராமன்

இன்றும், ஆங்கில மொழிக்கும், ஆங்கிலேய கலாச்சாரத்திற்கும் அடிமைகளாக இருக்கும் கொழும்பு வாழ் தமிழருக்குத் தங்கள் தொண்டு ஒரு பாடமாக அமையட்டும்.

இப்பொழுது செய்வது போலவே தொடர்ந்தும் ஈழத்தமிழருக்கு ஏற்படும் இன்னல்கள் அத்தனையையும் இவ்வுலகு அறிய வையுங்கள். வாழ்க தமிழ் வளர்க தங்கள் தொண்டு

கொழும்பு— 15. க.சிங்காரநாதன்.

" தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவனுக்கோர் குணமுண்டு "

என்பதனை லண்டன் முரசு வாயிலாக நிலைநாட்டிக் காட்டி விட்டீர்கள். லண்டன் முரசு தரணிவாழ் தமிழர்கள் ஆசியாலும், ஆண்டவன் அருளாலும் மேன்மேலும் வளர்ந்து உலகில் வீறுநடைபோட்டு மேற்கு நாட்டவரும் தமிழ் கற்கும் வகையிலே அமைந்தும் போற்றியும் தன்னிகரற்ற தனித்தமிழ்ப் பத்திரிகையாக வளர்ந்து ஒவ்வொரு பத்திரிகையிலும் தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் ஒவ்வொரு அதிகாரம் உலகத் தமிழ் மறையான வள்ளுவன் குறளையும், அயல் நாட்டுப் பெரியாரும் போற்றிப்படித்த தேன்கலந்து, ஊன்கலந்து இனிக்கின்ற திருவாசகப் பாடலையும், எம்மதமும் சம்மதம் என்று ஏற்றுநடந்து மணிவாசகர் வழி நின்று இராமலிங்கர் பாடிய திருவருட்பா பாடலையும் இடம் பெறச் செய்து — உலகமக்கள் யாவரும் அறிய வழி செய்ய வேண்டுகின்றேன்.

குருவராயப்பேட்டை,
வ.ஆ.மாவட்டம், தமிழ்நாடு.

கு.மு.கணேசன்
செயலாளர், மங்கலக்கிழார்
தமிழ் இலக்கிய மன்றம்.

கேரளத்தில் தாழ்த்தப்பட்ட மக்களாகிய ஹரிஜனர் கோவில்களில் பிராம்மணர்களாக வேலை செய்ய வைக்கப் பட்டதை அறிந்து மிகவும் சந்தோஷமடைகிறேன். கேரளா மட்டும் இல்லை —இந்தியா முழுவதுமுள்ள சகல கோவில்களிலும் ஹரிஜனர்கள் பிராமணர்களாக வேலை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துமாறு இந்துமதத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

போறொக், டப்ளின்,
அயர்லாந்து.

கே.ஐ.ஆர்.சாமி.

லண்டன் முரசு சஞ்சிகை எனதும், என் நண்பர்களினதும் பெருமதிப்பையும், வரவேற்பையும் பெற்றுள்ளதை மிக்க மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன். நீவிர் செய்துவரும் இத்தமிழ்த் தொண்டு பெரும் பாராட்டுக்குரியது.

******************************* செந்தமிழ் *******************************

- புலவர், வித்துவான் பொற்கோ M.A., B.O.L., Ph.D., -
- Dip in Bengali. -

தமிழுணர்ச்சி இருக்கிறதா? ஆம்ாம் என்றால்
தமிழரவர் தமிழர்தான். தமிழர்க் குள்ள
தமிழுணர்ச்சி தமிழ்மொழியை வளர்க்க வேண்டும்
தமிழுக்குள் எல்லாமே கிடைக்க வேண்டும்.

" இன்பத்தமிழ் எங்கள் உயிருக்குநேர் " என்று முழங்குகிறார் பாவேந்தர் பாரதிதாசனார். இந்த வரியைப் படிக்கும்போதும் கேட்கும்போதும் தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் ஒரு பெருமிதமும், உறுதியும், இனிமையும், எழுச்சியும் தோன்றுகிறது. தமிழர்கட்கெல்லாம் உயிர் தமிழ். தமிழக வரலாற்றையேகூட மாற்றக்கூடிய ஆற்றல் பெற்றது தமிழ். தமிழகத்தில் தமிழைப் புறக்கணித்து எதுவுமே வாழ்ந்ததில்லை. தமிழைப் புறக்கணித்து சமயங்கள் தமிழகத்தில் வாழ முடியவில்லை. தமிழைப் புறக்கணித்த அரசுகள் தமிழகத்தில் வாழமுடியவில்லை. தமிழ் வழியாக நுழைந்தால் தமிழர்கள் உள்ளங்களில் இடம் பெறலாம். தமிழுக்கும் தமிழர்க்கும் உள்ள உறவு அவ்வளவு நெருக்கமானது. "இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாடியது உண்மை —வெறும் புகழ்ச்சியில்லை.

இந்தத் தமிழ்மொழியைத் "தன்னேரிலாத தமிழ்" என்றும் "உயர்தனிச்செம்மொழி" என்றும் பாராட்டியிருப்பதைப் பார்க்கிறோம் ஒருபுறம் — தமிழில் புராணஇதிகாசங்களைத் தவிர வேறு என்ன இருக்கிறது? என்றும் தமிழில் இன்றைய உலகுக்குத் தேவையானமுறையில் அறிவைவளர்த்துக்கொள்ள என்னென்ன நூல்கள் இருக்கின்றன என்றும் வினா எழுப்புவதைப் பார்க்கிறோம் இன்னொரு புறம். மொழிக்கு முதன்மை கொடுத்தவர்கள் மொழியைப் பலவாறு பாராட்டியுள்ளார்கள். மக்கட்கு முதன்மை கொடுத்தவர்கள் இந்த மொழி இன்று மக்கட்கு எவ்வளவுதூரம் பயன்படுகிறதென்று வினா எழுப்பியுள்ளார்கள். "தன்னேரிலாத தமிழ்", "உயர்தனிச் செம்மொழி" என்ற பாராட்டுகளை படித்துவிட்டு "இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற பாடலையும் கேட்டுவிட்டு "இந்தத் தமிழில் என்ன இருக்கிறது?" என்ற வினாவையும் கேட்கும்போது ஒரு தமிழனின் உள்ளம் என்ன செய்யும்? அவனுடைய அறிவு என்ன சொல்லும்?

"தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என்கிறார் புரட்சிப் புலவர் பாவேந்தர் பாரதிதாசனார். "தமிழில் என்ன இருக்கிறது? என்று கேட்கிறார் முது பெருந்தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. ஒருவர்க்கு எல்லாமாக இருக்கிற ஒன்று இன்னொருவர்க்கு ஒன்றுமில்லாததாக இருக்கிறதே! இது என்ன விந்தை! இருவரும் "தமிழ்" என்ற சொல்லால் ஒரே பொருளைத்தான் குறிக்கிறார்களா? — இல்லை. தமிழில் உயர்ந்த தத்துவங்களும் சிறந்த இலக்கியங்களும் செம்மையான இலக்கணங்களும் உண்டு. உலகில் உள்ள மிகப் பழமையான மொழிகளுள்ஒன்றாகவும் இன்றும் எழுத்து வழக்கிலும் பேச்சுவழக்கிலும் ஆட்சியில் இருப்தாகவும் உள்ள மொழி தமிழ். தமிழை இந்த அடிப்படையில் பார்க்கிறார் பாவேந்தர். அதனால்தான் அவர் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று பாடுகிறார். தமிழர் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் தொலையவேண்டும் மூடநம்பிக்கைகள் ஒழியவேண்டும். தமிழர் சமுதாயம் உலக அரங்கில் அறிவுச்செழுமை பெற்று முன்னணியில் நிற்கவேண்டும். அதற்கு வழிசெய்யும் வகையில் இன்று தமிழில் நூல்கள் உள்ளனவா? அப்படிப்பட்ட நூல்கள் தமிழில் என்ன இருக்கிறது? முதுபெருந்தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமிழ்ச் சமுதாய நலன் ஒன்றையே அடிப்படையாகக்கொண்டு தமிழில் என்ன இருக்கிறதென்று கேட்கிறார்?

பாவேந்தரும் பெரியாரும் தமிழர்கள். எல்லோரும் மதிக்கத்தக்க பெரியமனிதர்கள். தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்றியமையாத திருப்பத்தை உண்டாக்கியவர் பாவேந்தர் தமிழ்ச் சமுதாய வரலாற்றில் இன்றியமையாத திருப்பத்தை உண்டாக்கியவர் பெரியார். இருவருமே அஞ்சாநெஞ்சம் படைத்த மாவீரர்கள் புத்துலகத் தேவைக்கேற்பப் புதுமைகளை வரவேற்கின்ற முற்போக்காளர்கள். இவர்களிடையே தமிழைப்பற்றிமட்டும் ஏன் இவ்வளவு கருத்து வேறுபாடு?

தமிழ் என்றால் என்ன? பாவேந்தருக்கு அது உயிர் போன்றது. பெரியாருக்கு அது ஒன்றுமில்லாதது. வேறு சிலருக்குத் தமிழன் பேசுவதெல்லாம் தமிழ்தான் தமிழன் எழுதுவது எல்லாம் தமிழ்தான். பாவேந்தர் தமிழை உயிர்போன்றது என்று இலக்கிய நயத்தோடுகுறிப்பிடுகிறார் தமிழ் என்றால் என்ன என்ற கேள்விக்கு உயிர் போன்றது என்பது முழுவிடை ஆகாது. பெரியார் தமிழைக் "காட்டுமிராண்டி மொழி" என்று தம்மனதுக்குப் பட்டதை ஒளிவுமறைவில்லாமல் வெட்ட

தமிழ் என்றால் என்ன என்பதற்கு இதுவும் விடையாகாது. தமிழன் பேசுவதெல்லாம் தமிழ் தமிழன் எழுதுவதெல்லாம் தமிழ் என்பது உண்மையானால் தமிழ்க்குழந்தைகட்குப் பள்ளிகளில் மொழியைக் கற்பிக்க வேண்டாம். இது சரி, இது தப்பு என்று உணர்த்த வேண்டாம். ஆனால் தவறுகளைக் கண்டு திருத்துகிறோமே —இது சரி, இது தப்பு என்று உணர்த்துகிறோமே ஆகவே தமிழ் என்றால் என்ன என்பதற்கு இதுவும் விடையாகாது. தமிழ் என்றால் என்ன?

தமிழன் பல்வேறு மொழிகளின் வாயிலாகப் பெறுகின்ற அறிவையும் அனுபவத்தையும் தமிழின் வாயிலாக வெளிப்படுத்தவேண்டும். தமிழன் மேற்கொள்கின்ற புதியபுதிய சிந்தனைகளையும் ஆராய்ச்சிகளையும் அவன் பெறுகின்ற புதியபுதிய அனுபவங்களையும் அவனுக்குத் தோன்றுகிற எண்ணிறந்த எண்ணங்களையும் அவன் தெளிவாகத் தமிழின் வாயிலாக வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டவற்றைத் தெளிவாகத் தமிழின் வாயிலாக, தமிழர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இது நமது தேவை. இன்றுள்ள தமிழ் இந்தத் தேவையை நிறைவுசெய்யும் அளவில் இருக்கிறதா? தமிழ் வாயிலாக இந்தத் தேவையை நிறைவுசெய்துகொள்ளும்போது தமிழர்கள் தமிழை எப்படி எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்? தமிழுக்கு எப்படி எப்படிப் பயன்பட வேண்டும்? இந்த வினாக்கட்கும் நாம் விடைகாண வேண்டும். இவற்றோடு தொடர்புடைய எல்லாச் செய்திகளையும் ஆங்காங்கு நம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வோம். தமிழ் என்றால் என்ன? ஒரு தலைசிறந்த மொழி இன்றைய தேவையை நிறைவு செய்யும் அளவில் இருக்கிறதா? நாம் தமிழை எப்படிப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் நாம் எப்படித் தமிழுக்குப்பயன்படவேண்டும்? இந்த வினாக்கள்தான் என்னைச் "செந்தமிழ்" என்ற தலைப்பில் எழுதத் தூண்டியிருக்கின்றன. தொடர்புடைய செய்திகள் முறையாகத் தொடரும்.

********** *********** **********

<u>லண்டனில் வாடகைக்கு குடியிருப்பு மனைகள்</u>

(இங்கிலாந்துக்கு வரும், மற்றும், இங்கு வதியும் தமிழ் மாணவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் உள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வாடகைக்கு ஏற்ற குடியிருப்புமனைகள் கிடைப்பதே. லண்டன் முரசு மூலம் இப் பிரச்சனையைக் குறைப்பதற்காக இப்பகுதியில் தகவல்கள் வெளியிடப்படும். இப்பகுதிக்குத் தகவல் தர விரும்புவோர் மாதந்தோறும் 10ந் திகதிக்குள் லண்டன் முரசிற்கு விபரங்களை எழுதி அனுப்பலாம்.)

1. <u>இரட்டை அறைகள்.</u> தமிழ்க் குடும்பத்துடன் தங்குவதற்கு வசதியான இரு இரட்டை அறைகள் வெந்நீர், மத்திய உஷ்ண , தளபாட வசதிகள் பொருந்தியவை. மேற்கு விம்பிள்டன் பகுதி. தொலைபேசி: 946 8916 (இரவு 6.00மணிக்குப் பின்)

2. <u>தனி அறை.</u> மத்திய உஷ்ண வசதி, மற்றும் தளவாட, சமையல் வசதி பொருந்தியது. மாணவருக்கு ஏற்றது. அக்ரன் டவுன் ரயில் நிலையம் அருகே வாடகை — £5-5-0. தொலைபேசி: 992 0696

3. <u>தனி, இரட்டை அறைகள்.</u> படிங்ரன் பகுதியில் காலை உணவு வசதியுடன் தனி அறை —£5-I0-0 இருவர் வதியும் தனி அறை — £4-I0-0 (நபருக்கு) இரட்டை அறை £9-9-0 (இருவருக்கு) தொலைபேசி: 723 7749

4. <u>இரட்டை அறை</u> இளந்தம்பதிக்கேற்ற இரட்டை அறை. வெந்நீர், தளபாட, சமையல் வசதிகள் பொருந்தியவை. விம்பிள்டன் பகுதி. £5-0-0. தொலைபேசி: 542 7102

5. <u>தனி அறை தேவை.</u> தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டருக்கு தமிழ்க் குடும்பத்துடன் வட லண்டன் பகுதியில் தனி அறை தேவை. — டாக்டர். முத்துசுவாமி தொலைபேசி: 65 26113 (நீட்டல் — 340))

6. <u>தனி அறை.</u> தளபாட வசதி பொருந்திய தனி அறை. விம்பிள்டன் பகுதி. வாடகை — £3.10.0. தொலைபேசி: 542 6022

7. <u>இந்திய மாணவர் விடுதி.</u> மூன்று நேர இந்திய உணவு வசதியுடன், மற்றும் மத்திய உஷ்ண வெந்நீர் வசதிகள் பொருந்திய விடுதி. பட்னி பகுதி. £8.0.0. தொலைபேசி: 788 3726.

லண்டன் விநோதம் பாரீர்

"பொன்"

## யாரிந்த் உலகப் பேரழகி?

ஆண்டுதோறும் லண்டனில் உலகப் பேரழகி போட்டி நடைபெற்று வருகிறது.இதனை நடத்துபவர் மெக்கா நிறுவன அதிபர் எரிக் மோர்லி.இந்த உலகப் பேரழகிப் போட்டியில் பல நாடுகளிலிருந்து பெண்கள் வந்து பங்கேற்கின்றனர்.ஆனால் ரஷ்யா,சீனா போன்ற நாடுகளும்எகிப்து அல்ஜீரியா,ஈராக்,சூடான்,ஈரான்,ஆப்கானிஸ்தான்,பர்மா,கென்யா,டான்சானியா, ஹங்கேரி, போலந்து போன்ற நாடுகள் பெண்களை அனுப்புவதில்லை —கொள்கை வேறுபாடாக இருக்க லாம்,அல்லது சமய அடிப்படைக் காரணமாகவும் இருக்கலாம்.

இந்தப் போட்டியை நேரில் சென்றும் தொலைக்காட்சி (Television) மூலமா கவும் லட்சக்கணக்கான மக்கள் பார்த்தனுபவிக்கின்றனர்.இந்தப் போட்டியில் வெற்றி பெறும் உலகப் பேரழகியின் அந்தக் குறிப்பிட்ட ஆண்டின் வருமானம் 10,000 பவுனிலிருந்து ஆரம்பித்து 50,000 பவுணையும் (ஸ்டெர்லிங்) தாண்டும்.இதுதவிர இதர வழிகளில் வருமானத்திற்குக் கணக் கேயில்லை.இது சம்பந்தப்பட்ட உலகப் பேரழகியின் சாமர்த்தியத்தையும் மனோபாவத்தையும் பொ றுத்து.இப்படி ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப் படும் உலகப் பேரழகியுடன் தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்று வெளிநாடுகளிலிருந்து லண்டனுக்கு வந்து சேரும் செல்வந்தர்கள் ஏராளம்.

இந்த ஆண்டாகிய 1970—க்கு உலகப் பேரழகியாக கிரனடா( Granada) நாட்டைச் சேர்ந்த ஜெனிபர் ஆஸ்டர் என்ற கட்டழகி தேர்ந்தெடுக்கப் பட்டார்.. கண்ணனைப் போன்ற கருநிறம் கொண்ட இந்தக் கட்டழகி பால்போன்ற மேனி கொண்ட பல ஐரோப்பிய அழகிகளை போட்டியில் புறமுதுகு காட்டி ஓடச்செய்து வெற்றி கண்ட இந்த விநோதத்தை சில நிற வெறியர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.இந்தப் போட்டி முடிந்து ஒருமாதம்வரையில் இந்த நிறவெறியர்களின் முணுமுணுப்பும் ஓலமும் ஓயவில்லை.உலகப் பேரழகியாகக் கருதப்பட்ட எகிப்திய அரசியான கிளியோப்பட்ராவே கார்மேக வண்ணக் கட்டழகியாமே இந்த நிறவெறி என்றுதான் ஒழியுமோ ?

இதற்கிடையே பெண்களியக்கம் (Women's Liberation Movement ) லிபரல் இயக்கம்( Young Liberals)போன்ற இயக்கங்கள் இந்த உலகப் பேரழகிப் போட்டி நடத்துவதை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துகின்றனர்.பெண்களை அரை நிர்வாண உடையில் அவையோரின் முன் தோன்றவைத்து,முன்னும் பின்னும் நடக்கச் சொல்லி,அங்க அளவுகளை அங்குல கணக்கில் கணக்கெடுத்து அதனை அவையோருக்குச் சொல்லி,அதற்கென்று சில நீதிபதிகளை அமர்த்தி உலகப் பேரழகியை தேர்ந்தெடுப்பது பெண்களைக் கீழ்த்தரமாக நடத்துவதற்கு ஒப்பா னது என்பது இந்தப் போட்டியை எதிர்ப்போரின் கொள்கை.இதில் நியாயம் இருக்கத்தானே செய் கிறது.இல்லையா ? இந்தப் போட்டிக்கு நீதிபதிகளாக கலைஞர்களும் சில வேளைகளில் வெளி நாட் டுத் தூதுவர்களும் நியமிக்கப் படுகின்றனர்.இந்த ஆண்டுப் போட்டியில் ஒரு நாட்டின் பிரதமரே நீதிபதியாக அமர்ந்தார்.பெண்ணாசை யாரைத்தான் விட்டது?

---

**************** கிறிஸ்துமஸ் கரோல் பாட்டு *****************************

இயேசுராஜன் ஏழைக்கோலம் ஏற்றுப் பூவில்
வந்துதித்தார்.

அற்புதபாலன் இம்மானுவேலன் ஆயர்குடிலைத் தெரிந்தெடுத்தே
பெத்தலையில் முன்னணையில் மெத்தவுமே தம்மைத் தாழ்த்தினாரே !

இயேசு....

நமக்கோர் பாலன் வந்துதித்தாரே நமது துன்பம் தீர்ப்பவரே!
ஆலோசனைக் கர்த்தரிவர் அதிசயமவர் நாமமதே !

இயேசு....

பாவத்தில் மாழும் பாவியை மீட்க பங்கமில்லாப் பாலகரே!
தன்னுயிரை மன்னுயிர்க்காய் தந்து ஜெபபலியாக்கினாரே !

இயேசு....

¶¶¶¶¶¶¶¶¶¶¶¶¶¶¶

— மகிழ்வேந்தன் —

# நாளை நமதே!

மனிதன் பிறக்கிறான். முடிவில் சாகிறான். இவை இரண்டிற்கும் இடையிலேதான் அவன் தனது சாதனைகளை நிலைநாட்டுகிறான். அவை பிறருக்குப் பயனுள்ளவையாகவும் இருக்கின்றன, இல்லாமலும் இருக்கின்றன. அவன் செயல்களினிமித்தம்தான் கோபுரத்திற்கும் உயர்த்தப் படுகிறான். குப்பை மேட்டுக்கும் தாழ்த்தப் படுகிறான்.

பிறரது அறியாமையைப் புரிந்து கொண்ட சுயநலக் கும்பல்களாலும், கடவுளின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றி வயிற்றை நிரப்பி வந்த வெறியர்களாலும், உரிமை பறிக்கப் பட்டு, இயற்கையின் எதிரொலிகளுக்கும், மூடநம்பிக்கையின் முரட்டுக் கொள்கைகளுக்கும், நடுங்கி, தலைவணங்கி, அறியாமைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த கிரேக்க சமுதாயத்தினருக்குச் சிந்தனை என்னும் சிறுதுரும்பை வீசிய 'சாக்ரடீஸ்' இளமை துடிக்கும் இளைஞர்களை அறைகூவியழைத்தான். வருங்காலத்தையும், வளர்ந்து வரும் சமுதாயத்தையும் செழிப்பாக்குவதற்கு, சமுதாய வானில் நட்சத்திரங்களாக ஜொலிக்கும் இளம் முறுக்கேறிய வாலிபர்களையழைத்தான். "உங்களுக்காக இந்த வாழ்க்கை மைதானம் பரந்து கிடக்கின்றது. அதில் திறமையாக விளையாடி வெற்றி பெறுங்கள். அதற்குரிய உடல்பலமும், மனோபலமும் இளைஞர்களாகிய உங்களிடம்தான் உள்ளது" என்பதைத் தெளிவு படக் கூறினான்.

அப்படி அவன் கூற்றை இளைஞர்கள் கேட்டதனால்தான் கிரேக்க சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. கிரேக்க சமுதாயத்தில் 'சாக்ரடீஸ்' தோன்றியதுபோல உலகின் பலபாகங்களிலும் பல அறிஞர்கள் தோன்றினார்கள். தங்கள் சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டார்கள். அப்படி அவர்கள் தட்டியதனால்தான், அந்தக் குதிரையின் குழம்படிபட்ட இடமெல்லாம் பொன் கொழிக்கும் பூமியாக மாறியது.

அமெரிக்காவில் ஒரு 'கென்னடி', ஒரு 'ஆபிரகாம் லிங்கன்' தோன்றியதனால் தான் இன்று அங்குள்ள கறுப்பர்கள் ஓரளவுக்காவது தங்கள் உரிமைகளை நிலைநாட்டக் கூடியதாய் இருக்கிறது. ரஷ்யாவில் ஒரு 'ஸ்டாலின்' ஒரு 'லெனின்' தோன்றியதனால்தான் இன்று யாருக்கும் அஞ்சாத, எதற்குமே தலைவணங்காத ஒரு வல்லரசாக அது திகழ்கிறது. இந்தியாவில் ஒரு 'காந்தி' தோன்றியதனால்தான் அது விடுதலை பெற்று இன்று சுதந்திர பூமியாக, நடுநிலைமை நாடாகத் திகழ்கிறது.

இவ்வளவு ஏன்? தமிழ் நாட்டில் ஓர் 'அண்ணா' தோன்றியதனால்தான் இன்று "தமிழக அரசு" என்று அதைப் பெயர் சொல்லி அழைக்கிறோம். தமிழர்கள் தலைநிமிர்ந்து நடப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இப்படி எத்தனையோ அறிஞர்கள் தோன்றினார்கள்; தோன்றுகிறார்கள்; தோன்றுவார்கள். தோன்றுகிறவர்களும் நம்மிடையேதான் தோன்றுகிறார்கள்; தோன்றுபவர்களும் நம்மிடையேதான் தோன்ற வேண்டும். பிற்காலத்தில் அறிஞர்களாக வந்தவர்கள் அனைவரும், பிறக்கும் போதே அறிஞர்கள் ஆகவும், பெரியவர்களாகவும் தோன்றவில்லை. தங்கள் தாயின் கைகளில் தவழும் சாதாரணக் குழந்தைகளாகத்தான் தோன்றினார்கள். ஆனால் தங்களது முயற்சியினாலும், அறிவினாலும் ஊருக்கு உயர்ந்தவர்களாக ஆகி தங்களுக்கும் பெருமை தேடிக் கொண்டார்கள். "நாம் எல்லோருமே ஏன் அப்படி வரக் கூடாது?" என்று எண்ண வேண்டும்.

..நானும் வாழ்ந்து, என் குடும்பமும் வாழ்ந்தால் போதும், எதற்கு ஊர்வம்பு? என்ற அற்ப புத்தி நம்மை விட்டுப் போக வேண்டும். சிலர் கூறுவார்கள் இப்படி "அறிஞனாக வருவதற்கு பெரிய தகுதி வேண்டும். அது பெரிய விஷயம். நமக்கு எதற்கு அந்த வேலையெல்லாம்? எங்களை ஒருவரும் புகழ வேண்டாம். நாங்களும் பேசாமல் இருந்து விடுகிறோம்" என்று. ஆனால் தங்களை மற்றவர் புகழவேண்டும் என்றோ, அல்லது தங்களுக்குச் சிலை வைக்க வேண்டும் என்றோ எண்ணியவர்கள் எவருமே பிறரால் மதிக்கப் பட்டதில்லை. தனது சுயநலத்துக்காகப் பொதுநலத்திற்குப் பாடுபட்டவன் எவனுமே நல்ல நிலைக்கு உயர்த்தப் பட்டதில்லை என்பதற்குச் சரித்திரங்களே சான்று கூறுகின்றன. ஆனால் அன்பும், அறமும் அறிந்து, உண்மையை உணர்ந்து, தன்னலத்தைத் தகர்த்தெறிந்து, பொதுநலத்திற்குப் பாடுபட்டு, நாட்டைப் பொன்னாடு ஆக்கினால், மக்களை வாழவைத்தால் இறைவன் அருளைப்பெற வழி கூறினால், அறம் அறிந்தோர் பாராட்டாமல் இருப்பார்களா?

ஆகவே இன்றைய இளைஞர்களாகிய நாம் இதற்கு முன் வருவோம். பிறர் நம்மைப் பாராட்டவேண்டும் என்ற எண்ணத்தோடு எதையுமே செய்ய வேண்டாம். நமது தாய்நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் ஏதாவது செய்துதான் தீரவேண்டும் என்ற எண்ணத்தை நம் இரத்தத்தில் ஊற வைப்போம். எதுவுமே உண்டு, உண்டு என்று சொல்லி நம் கால்களை முன்னே வைப்போம். அறிவையும், நேர்மையையும், அன்பையும்—தேவையானால் பலத்தையும்—ஆயுதமாகக் கொண்டு எத்தனை தடை வரினும் தகர்த்தெறிவோம். மலைபோல சோதனைகள் வந்தால் பனி போலக் கரைய வைப்போம். இதோ, மிகவும் வளமான எதிர்காலம், அதிக தூரத்தில் இல்லை என்ற ஒலி நமது காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறதே. அதை அடையாமல் விடமாட்டோம். நாளை சமு

## காதல் - 2

சு.க.சுப்பிரமணியன்.

காதல் என்னவோ இரண்டு உள்ளங்களை ஆட்டிப் படைக்கும் ஓர் இனம்புரியாத உணர்வுதான். ஆனால் அந்த இரண்டு உள்ளங்களை அது எப்படி இணைத்து வைக்கிறது என்பதுதான் பெரிய புதிர். சில காதல்கள் கண்டதும் தோன்றி விடுகின்றன. கண்டதும் காதலா? என்ன செய்ய இயலும்? உள்ளங்களில் அடிப்படை உணர்வுகள் சில நேரங்களில் திடீரென வெளியாகி விடுகின்றன. மறோ தத்துவ ரீதியில் இது சாத்தியம். சில உள்ளங்கள் இணைவதற்கு ஆண்டுகள் பல ஆகிவிடுகின்றன. இவை அனைத்தும் ஆண் பெண் இருபாலாரின் சந்தர்ப்ப சூழ்நிலைகள், பழக்க வழக்கங்கள், குணாதிசயங்கள் இவற்றைப் பின்பற்றி நிற்கின்றன. சில காதலர்கள் பெண்ணின் குழைவான சொல்லுக்கே அடிமையாகி விடுகிறார்கள். சொல்லுக்கு அத்துணை மகிமை. இதோ திரிகூடராசப்ப கவிராயர் பெண்ணின் சொல்லைப் பற்றிக் குறிப்பிடுவதைக் கேளுங்கள்.

"கரும்பு போல் இனித்து மருந்து போல் வடித்த சொல்லினாள்". சொல்லிலே இனிப்பும், மருந்து போன்று அளந்து பேசும் இனிமையும் காதலிகளுக்கு வாய்த்துவிட்டால் காளையர் கதி என்ன ஆவது. காளையர் மயக்கம் ஒருபுறம் இருக்கட்டும். காதலில் கட்டுண்ட கன்னியர் கலக்கம் எப்படி இருக்கும் என்று பார்ப்போம்.

"கைக் கரும்பு என்ன? கணை என்ன நீ என்ன—மன்மதா இந்தச்
செக் கரும் பாவி நிலாவுமே போதாதோ —மன்மதா?" —திரிகூட இராசப்ப கவிராயர்.

இரசாயன பாடத்தில் இரண்டு மூலப்பொருள்கள் சேர்க்கைக்கு கிரியா ஊக்கி (Catalyst) ஒன்று தேவை என்று சொல்வார்கள். அத்தகைய கிரியா ஊக்கிதான் காதல் இலக்கியத்தில் மன்மதன். மன்மதனைக் கடவுளாகக் கண்டாலும் சரி, உணர்வை ஊட்டும் ஓர் சக்தியாகக் கொண்டாலும் சரி, மேற்கண்ட கவிதை நயம் பாராட்டுக்குரியது. மன்மதன் கை கரும்புவில் எதற்கு, அம்பு எதற்கு, வானத்து நிலா ஒன்று போதுமே, என் காதல் வேதனையைக் கூட்டிவிடுவதற்கு என்று அங்கே ஓர் காதலி வாடுவதைக் காண்கிறோம்.

காதல் என்பது ஓர் நோய் என்றுதான் கூறவேண்டும். ஆனால் இந்த நோயின் தன்மையே வேறு. மற்ற நோய்களுக்கு மருந்து வெளியே இருந்து பெறப் படும். ஆனால் இந்தநோய்க்கு மருந்து இணைந்த இரண்டு உள்ளங்களில் இருந்து பெறப் படும். நோய் என்றதும் வள்ளுவர் இந்த நோய் பற்றி குறிப்பிடுவது நினைவிற்கு வருகின்றது.

"தொடிற் சுடின் அல்லது காம நோய் போல
விடிற் சுடல் ஆற்றுமோ தீ".

தீ என்னவோ அருகில் சென்றால் சுடும் தன்மையது. ஆனால் காதலோ விலகி இருந்தால் சுடும் தன்மையது. என்னே கருத்தாளம். ஆகவே இந்த நோய்க்கு மருந்து சுவையான நெருக்கம்தான்.

காதல் பேசத் துவங்கி விட்டால் மனித இனம் மயக்கம் அடைந்து விடும். மனித இனம் மட்டுமல்ல, தெய்வ இனமும் அதே கதிதான். ஆங்கிலப் பெருங்கவி ஷேக்ஸ்பியர் காதல் தான் பேசத் துவங்கி விட்டால் என்ன ஆகும் என்று கூறும்பொழுது "காதல் தன் வாய் திறந்து பேசத் துவங்கி விட்டால், கடவுளர்களின் இணைந்த இனிய குரலில் சொர்க்கமே ஒரு வகையான மயக்க நிலையை அடையும்" என்று கூறுகிறார். தெய்வ இனமே தத்தளிக்கும் போது மனித இனத்தைப் பற்றி கேட்க வேண்டுமோ?

மனித இனத்திற்கு வரும்போது வில்லியம் வார்ட்ஸ்வொர்த் அவர்கள் "காதலின் சக்தியில் இதம் உள்ளது. அது எப்பொருளையும் நிலையானதாக்குகிறது" என்று எடுத்துரைக்கிறார். காதலின் சக்தி அத்துணை நிலையானதா? ஆம் ஆம் என்கிறார் இயற்கைக் கவி ஷெல்லியும் (Shelley)

"காதல், அழகு, மகிழ்வு இவற்றிற்கு அழிவும் இல்லை சாவும் இல்லை"

காதல், மகிழ்வு இவற்றிற்கு அழிவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வதாகத் தெரிகிறது. அழகுக்கு அழிவில்லை, என்பதை ஒப்புக் கொள்ளத்தான் சற்று சிரமமாக உள்ளது. ஏன்? "அழியாத அழகு உள்ள பெண்ணைத் தேடுகிறேன். இன்னும் கிடைக்கவில்லையே" என்கிறார் ஓர் காதலர்.

## சாமர்செட் எழில் வளம்

எங்கணும் இனிமை எங்கணும் பசுமை எதுரைப்பேன் எழில் வளத்தை
மங்காப் புகழும் மாறாச் சிறப்பும் பூத்துக் குலுங்கும் ஆங்கில நாட்டில்
உள்ளம் கவரும் கன்னியைத் தேடி ஊர்பல தாண்டி சாமர்செட் சென்றேன்.
பள்ளமும் மேடும் பலப்பல கண்டேன் பாங்குடன் வளர்ந்த மரம்பல கண்டேன்.
உள்ளம் களித்தேன் உவகையுற்றேன் லாங்லீட் சிங்கம் பார்க்கநற் காட்சி.
கள்ளமாய் இயங்கும் குதிரைப் பழம்மணி பார்த்திடப் புதுமை வெல்ஸ் நகரில்
தேவாலயம் உண்டென்றறிந்து உவகையுடன் பார்த்தேன் வெல்ஸ் நகரில்
பாவம் பலவும் அகன்றதென்றெண்ணி பான்வெல் கோட்டையும் டன்ஸ்டர் கோட்டையும்
ஆவலைத் தூண்டும் வூக்கி குகையும் அறுசுவைப் பழம்நிறை செட்டர் குகையும்
ஏவல் பலமிகு பழம்பெரு ரோமர் கைத்திறம் இன்றும் காணும் பாத் நகரும்
காணச் சென்றேன். கண்டதும் கண்முன் மாமல்ல புரமும், செஞ்சிக் கோட்டையும்
மாறாச் சிறப்புடை மதுரை நகரும் வந்துயர் காட்சியைத் தந்து மறைந்தன.
மண்கல வேலை கண்கவர் சிறப்புடன் கிளாஸ்டன் பரி டோரில் இயங்கக் கண்டேன்.
லிண்டன் நகரின் ஒருகூர் மலைமேல் உடன்என் எண்ணம் ஊட்டியை நாடும்.
கடற்கரை நகர்கள் பலப்பல உண்டு சாமர்செட்டில் பிரிஸ்டல், எக்ஸ்மோர்
இடர்பல தாண்டி இன்பம் தேடிச் செல்வோர் உரையும் சூப்பர் மேடும் இப்படிப்
பலவூர் சென்றும், பழகும் மக்கள் பலரைக் கண்டும் உள்ளம் ஏனோ
கலக்கம் அடைந்து காதலின் இனியளைக் காணாது துயருற்று ஏங்கியது.
அந்தநேரம் மனத்துயர் தீர்க்கக் கண்மணி ராதா கண்முன்தோன்றி புன்னகை பூத்தாள்.
எந்தஊர் என்றாள் இந்திய மண்ணுக்குரிமை நான் அதிலும் தென்னகம் என்றேன்
மதராசா என்று மகிழ்வுடன் கேட்டாள் அந்தக் குறுநகை காட்டும் குறும்புக்காரி
பதறாமல் நானும், சங்கம் வைத்து மொழி வளர்த்த செந்தமிழ்நாடு என்னாடு என்றேன்
கரும்பான மொழியோடு விருந்தழிக்கும் வேல்விழியைக் காட்டிவிட்டாய்
கருத்தாளம் புரியாது கலங்குகிறேன் கடிது துயர்தீர்ப்பாய் கண்ணே ராதா.

— அன்புக் கண்ணன் —

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

## அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு

— உலகநாதன், லண்டன். —

வீட்டினிலே மரமொன்றை நாட்டி வைத்து
    விதவிதமாய் தின்பண்டம் தேடி வைத்து
கூட்டினிலே மின்விளக்கை ஏற்றி வைத்து
    குதூகலமாய்ச் சிறுவர்கள் பாடி ஆடும்
ஈட்டுபுகழ் யேசுபிரான் அவ தரித்த
    இன்பமிகும் திருநாளைப் போற்றி யாமும்
நாட்டினிலே நலம் பலவும் பெருகவென்றே
    நத்தாரைப் போற்றிக் கொண் டாடுவோமே.

சந்திரனில் காலடியை வைத்துவிட்டார்
    சமதர்மக் கொள்கையினை மறந்துவிட்டார்
எந்திரங்கள் எண்ணிறைந்த ஆக்கிவிட்டார்
    எண்ணத்தில் சிறிதளவும் ஏற்றமில்லார்
தந்திரங்கள் செய்துபல சண்டையிட்டுச்
    சாக்சத்தால் நாடாளும் ஆசைகொண்டார்
எம்பெருமான் ஏசுபிரான் சொல்லிவைத்த
    எவ்வுரையும் உளத்தினிலே கொள்ளலாதார்.

தன்னுயிர்போல் மன்னுயிரைப் போற்றி வாழ்ந்து
    தமிழினத்தின் தனிப்பெருமை நாட்டல் வேண்டும்
இன்னிசையின் இருஞ்சுவைபோல் இதயம் என்றும்
    இனிமையதாய் எல்லோர்க்கும் இருத்தல் வேண்டும்
நல்நினைவு நம்பிக்கை நேர்மை கொண்டு
    நானிலமும் போற்றிடவே வாழ்ந்து காட்டல்
இன்னவைதான் இதுபோன்ற விழாவால் நாமும்

## TAMIL THROUGH ENGLISH   LESSON 8.

In this lesson we will study the formation and pronounciation of the vowel consonants arising from the consonant த். These are hard front palatal consonants denoted by 'th'. These may become soft when it comes in the middle especially when preceded by ந். The vowel consonants are as follows:-

| | | |
|---|---|---|
| த் + அ = த | த் + ஆ = தா | த் + இ = தி |
| as thu in thumb. | as tha in thatch. | as thi in thick. |
| த் + ஈ = தீ | த் + உ = து | த் + ஊ = தூ |
| as the in thesis. | as Thu in Thusis. (Thusis is a place in Switzerland) | as Thu in Thūle. (Thule is an Island in Greenland) |
| த் + எ = தெ | த் + ஏ = தே | த் + ஐ = தை |
| as the in theft. | as thi in third. | as thi in thigh. |
| த் + ஒ = தொ | த் + ஓ = தோ | த் + ஔ = தௌ. |
| as tho in thong. | as tho in thorn. | as thou in thousand. |

* * * * * * * * * * * * *

Now let us form a few words using the letters so far studied:-

தம்பி = younger brother
thumpi

தாடி = beard
thādi

தோடு = ear stud
thōdu

தகடு = metal sheet
thakadu

தேங்காய் = coconut
thēnkai

தம்பி தேங்காய் தா = Younger brother give a coconut.
Thumpi thēnkai thā

அக்கா தோடு கொடு = Elder sister give the ear stud.
Akkā thōdu kodu

## NEWS from MAURITIUS

*** The speech from the Throne had spelled out a crowded programme which the Government is willing to work on, and implement, to set Mauritius again on the road to recovery. Important features of the programme are as follows:-

1. Creation of Regional Development Councils - These would provide further opportunities for the full participation of the public in the work of National Planning and Development.

2. Ten Year Plan - A ten year plan will be drafted for the period 1971 - 1980.

3. Acquisition of Fallow Lands - Legislation will be introduced to ensure that all arable lands which have lain fallow for two or more years will be exploited or acquired.

4. Setting up of Local Government Service Commission - This would stabilise the policy of appointments in the Municipalities.

5. Fixing of dates when complaints against the administration could be received by the Government.

6. 'Use of Employment Exchanges Only' for recruiting labour in the public sector.

---

*** Mr.Ramphul, the representative of Mauritius at the United Nations will not be recalled! It is argued that if Mr. Ramphul voted for the expulsion of South Africa lately. It was because instructions to the contrary reached him too late.Further, his previous stand against South Africa was due to a lack of communications and an ambiguous foreign policy.

*** Mr.M.Dev Virah Swamy leading legislative assembly member belonging to the "MMM" made his maiden speech lasting for 90 minutes. He emphasised that the government should be fully aware of the problems of racialism and of the 70,000 jobless persons.

*** A grand Fancy Fair organised by the "Tamil Friendship circle" was held on the 6th of December 1970 at á l'école Villiers René , rue R.Seeneevassen, Port Louis.

## LETTERS to the EDITOR

It is very interesting to seethat you are now including news about Mauritius in "London Murasu". I hope we shall be able to read much more. We could also do with much more articles in English.

I personally find it a great pleasure only to be able to see my mother language being in existence in this country, and was, far too proud to receive the "Murasu" than to worry about whether I could read it all or not.

Tylers Green, Bucks.

Veerasamy Padayadchy.

# VACANCIES

## CEYLON

1. AGRICULTURAL OFFICER

DEPARTMENT OF AGRICULTURE,
C/O Public Service Commission
P.O.BOX.500. COLOMBO.1.
Closing date:18th Dec 1970

SALARY:Rs.6,720-12/360-11/480-16,320.

Qualifications:
1. 1st or 2nd class Special degree in Agriculture.
2. Physical Fitness / Excellent character.
3. Age: 22-30 years.

2. PRINCIPALS - GRADE II MAHA VIDYALAYAS

SCHOOL ADMINISTRATION BRANCH
MINISTRY OF EDUCATION
COLOMBO 2.
Closing date:22nd Dec 1970

SALARY:Rs.6312-2/144-8/180-5/240-9240 p.a plus married allowance

Qualifications:
1. a) Grade III Principal 3years OR
   b) Trained Graduate 7years experience in teaching OR
   c) Graduate of University 10years teaching OR
   d) Grade II Special Post holder with 5years of Service
2. Physical Fitness / Excellent character.
3. Age: Over 30.

3. ENGINEERS

STATE ENGINEERING CORPORATION
C/O Ceylon High Commission
13 Hyde Park Gardens.W.2.

QUALIFICATION AND SALARY
1. A.M.I.C.E. Rs.1175-45-1400.
2. AMIEE, AMIMechE Rs.1265-45-1400.
3. Engineering Degree with 2years experience Rs.800-40-1120.
4. Engineering Degree without experience Rs.700-40-860

Applications from qualified candidates will be entered in Register of Appoinments for consideration for filling immediate vacancies and for call up to fillvacancies occuring in future.

## INDIA

INDIAN INSTITUTE OF SCIENCE
BANGALORE.12.

Closing Date: 30 th Jan 1971

1. PROFESSORS

SALARY:Rs.1100-50-1300-60-1600

2. ASSISTANT PROFESSORS

SALARY:Rs.700-50-1,250

Qualifications: (for 1&2)
A Doctors degree in Science or Tecnology with estabilised recod of research or development work in one of the major areas given -below

3. LECTURERS

SALARY:Rs.400-40-800-50-950.

Qualifications:
A Doctors degree or
PostGraduate degree in one of the special areas given below and good industrial experience in design,development.

( Major areas:
1.Systems Science/Engineering:(a)Adaptive Systems,(b)Stochastic Systems,(c)Optimization theory and methods,(d)Power Systems,(e) System Simulation.
2.Control Engineering:(a)Automation of industrial processes,(b) Numerical control of machines,(c)Pneumatic and hydraulic control, (d)Fluidics,(e)Bio-engineering,(f)Mathematical methods.

CONT'D.



3.Computer Science/Engineering:(a)Analog/digital computer design,(b)Computer programming and computer languages,(c) Manmachine systems (pattern recognition),(d)Computer aided design,(e)Transmission and processing of information.
4.Electronics:(a)Electronic instumentation/devices, (b) Microwave devices and antenna design,(c)Radar systems,(d) Integrated circuit technology,(e)Semiconductor materials and devices.)

---

4. General Manager
5. Finance Manager
6. Project Manager
7. Design Engineers(Tools)
8. Manufacturing Engineers(Tools)
9. Machine Shop Engineers
10. Chief Industrial Engineers
11. Industrial Engineers,
12. Automobile Engineers

Large Scale Light Engineering Company for the Manufacture of Scooters,MADRAS.

BOX NO 5894 C/O, THE HINDU
MOUNT ROAD, MADRAS-2.

SALARY: Commensurate to the Position.

Qualifications:

1.Graduate in Engineering for all posts except Finance Manager.
2.5 Years experience in Similar industry.

---

I3. Chief Accountant

Engineers India Ltd.
17,Parliment Street,
New Delhi-1

Qualifications:

1.Commerce Graduate & Member of I.C.A.or I.C.W.A. INDIA or U.K.
2.15 Years experience .
3.Those with above Rs.20,000/-per annum Salary.
4.Age limit 45 Years.

---

14. Associate Professor of Obstetrics and Gynaecology

Salary:Rs.600-40-1000-EB-50-1300

Ministry of Health,Family Planning Works,Housing and Urban Development.New Delhi.

Qualifications :

1.A medical qualification included in the First or Second Schedule or Part II of the Third Schedule (other than licentiate qualifications)to the Indian Medical Council Act,1956.

2.Age : 45 Years and below.

Closing Date:11 th Jan 1971

****************************

8 அஷென் க்ரேவ் லண்டன் தெ.மே.19ல் உள்ள லண்டன்முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது.

# EASTERN EXPRESS COMPANY LTD.

24, WARREN STREET, LONDON. W.2.

**Tel: 01-387 2933, 01-387 8750 Cables: EASTEXPRESS**

*BEST CHEAPEST AND EFFICIENT SERVICES AVAILABLE FOR:*

- Clearing of incoming Baggage & Delivery to any part of the United Kingdom.
- Collection of All Household effects, Automobiles, etc.
- Packing, Insurance, Dock Delivery & Worldwide Shipment.
- Electrical Goods at very Special Discount Rates.
- Used Motor Cars at Bargain Prices.


**Printed by ORIENTAL PRINTERS LIMITED, 187 Edgware Road, W.2. 01-723 7756.**